௨

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-சo.] சுபானு-ஹூ ஆடி மீ [பகுதி-கூ.

Vol. 40. July-August 1943. No. 9.

அருளிச்செயற் பாடவமைதி

ககo-ஆம் பக்கத் தொடர்ச்சி.

[ராவ்ஸாஹிப். வித்வான். ஸ்ரீ. மு. இராகவையங்காரவர்கள்.]

26 பெரியதிருமொழி 1-4-6-ஆம் பாசுரத்தில்—

"காரணந் தன்னாற் கடும்புனற் கயத்த
கருவரை பிளவெழக் குத்தி
வாரணங் கொணர்ந்த கங்கையின் கரைமேல்
வதரியாச்சிராமத்து ளானே"

என்ற அடிகளின் முதலில் 'கடும்புனற் கயத்த' என்ற பாடம் இப்போது வழங்கிவருகின்றது. இதற்குத் திவ்யார்த்ததீபிகை ஆசிரியரான ஸ்ரீ. உ.வே. அண்ணங்கராசாரியஸ்வாமி,

"வேகமாகப் பெருகுகின்ற ஜலம் நிறைந்த பள்ளங்களையுடைய......" (மலை அல்லது கங்கை) என்று பதப்பொருளும்,

"கயத்த என்பதற்குத் 'தகைந்த' என்று சிலர் பொருள்கூறுவர். அஃது ஆதாரமற்றதாகும். கைத்த என்ற பாடமிருப்பின், அப்பொருள் கொள்ளலாகும்......பெரியவாச்சான்பிள்ளை அருளிய வ்யாக்யானத்தில்—

'பகீரதன் கங்கையை அவதரிப்பிக்கிறபோது, நடுவழியிலே ஒரு மலை தகைந்துகொடுநின்றதாக, அத்தை இருபிளவாம்படி குத்தி யானைகளையும் உருட்டிக்கொண்டு இவ்வருகேபோந்து இழிந்ததாகச் சொல்லக்கடவது'— என்று அருளிச்செய்திருட்பதைக்கண்டு, 'கயத்த' என்பதற்குத் தகைந்த என்று சிலர் பொருள்வரைந்திட்டனர்......அவ்வாறுகொள்ள வழியுமில்லை அவசியமுமில்லை"

என்று விரிவுரையும் எழுதியருளினர். ஆனால் ஸ்வாமிகூறிய பொருள், பெரியவாச்சான்பிள்ளை எழுதாத அர்த்தாந்தரமேயாகும். அப்பொருளின்படி, 'கடும்புனற்கயத்த' என்பது கங்கையை விசேடிப்பதானல், அது தூரான்வயமாகின்றது. அவ்விசேடணத்தால் பெறப்படும் பொருணயத்தினும், பிளவெழக்குத்தப்பட்டதற்கு ஏதுவைக் குறிக்கவேண்டி மலை அவ்வாறு விசேடிக்கப்பட்டதென்பதே சிறப்பாகும். பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானத்தில் 'ஒருமலை தகைந்துகொடுநின்றதாய்', 'அம்மலை தகைந்தவளவிலே' என்று இருமுறை தகைதற்சொல் பயில்வதாலும், இதற்கேற்ப, 'ஜலத்தைத்தகைந்த' என்று பதவுரைகாரரும் எழுதியிருப்பதாலும், 'ப்ரஸக்தியை நிரூபணஞ்செய்வதற்காக' அன்றி, ஏதோ ஒரு மூலச்சொல்லைத் திருவுளத்துக்கொண்டே தகைதற்பொருளை அப்பெரியார் குறிக்கலாயினர் என்பதில் ஐயமில்லை. ஆழ்வாரது சொல்தொடரமைதிகளை அடியொற்றியே பெரியவாச்சான்பிள்ளையின் வ்யாக்யானபங்திகள் பெரும்பாலும் அமைந்துள்ளன என்பதையும், பாடவுண்மைகள் விளங்குவதற்கு அவை பேருதவியாயிருப்பதையும் தீபிகையாசிரியரான ஸ்வாமியே பல இடங்களிலும் நிரூபணஞ்செய்திருக்கிறார். சிறிது நுணுகிநோக்கினால், பிரஸ்தாபப்பாடத்திலும் அவ்வாறு உண்மைப்பாடம் உள்ளடங்கியிருப்பது புலனாகக் கூடியதாம். அதனைச் சிறிது இங்கே விளக்குகிறேன்.

பழைய தமிழ்நூல்களெல்லாம், சுவடிகளினின்றே பெயர்த்தெழுதிப் பதிப்பிடப்பெற்றவை என்பதை அறியாதாரில்லை. அவ்

வேட்டெழுத்துக்களிலே, ஒற்றுக்களுக்குப் புள்ளிகுத்தும் வழக்கம் பெரும்பாலும் கிடையாதென்பதையும் அவைகளிற் பயின்றார் நன்கறிவர். அம்முறையில், இப்போது எடுத்துக்கொண்ட தொடர்,

'கடுமபுனறகயதத கருவரை'

என்று பழைய ஸ்ரீகோசங்களில் அமைந்திருப்பதைப் பொதுவாகவே காணலாம். இதனை ஒற்றிட்டுப் படிப்போர்,

'கடும்புனற்கயத்த...' என்றேனும்

'கடும்புனற்கய்த்த' என்றேனும்

'கடும்புனறகய்த்த...' என்றேனும்

வாசித்துப் பாடங்கொள்ளுதல் இயல்பேயாகும். இவற்றுள், முதலிற் காட்டியதே, இப்போது பாடமாகிப் பதிப்பும்பெற்றது. ஆனால், பெரியவாச்சான்பிள்ளைகாலத்துப் பாடமோ,

'கடும்புன றகைத்த கருவரை'

என்பதே. வேகமாகவரும் நீர்ப்பெருக்கைத் தடுத்துநின்ற கரியமலை' என்பது பொருள். [கடும்புன றகைத்த-கடும்புனல் தகைத்த.] தகைத்த என்பதன் இடையிலுள்ள 'கை', ஓசையொற்றுமையால், 'கய்' எனப் போலியாகப் பின்னோரால் எழுதப்பட்டதேயாம். ஆகவே, 'கடும்புனல் தகைத்த' என்ற ஆழ்வார்திருவாக்கை அடியொற்றியே 'ஒருமலை தகைந்ததாக, தகைந்தவளவிலே, என்று பெரியவாச்சான்பிள்ளை பொருளருளிச்செய்தனர் என்க. 'நினைத்த, நினைந்த' என்பனபோலத் தகைத்த, தகைந்த என்பவை ஒத்த செயப்படுபொருள்குன்றாவினைகளேயாம். ஸ்வாமி குறித்தபடி, 'கைத்த' என்று பாடங்கொள்ளின், அது, தகைந்த என்ற பொருளை நேரே பயவாமையும் காண்க. 'கடும்புனற்கயத்த' என்பதுபோல, வட்டெழுத்துக்களின் மயக்கத்தால் வழங்கிய பாடங்கள் அருளிச்செயல்வியாக்யானங்களிலும், முன்னூல்களிலும் உண்டு. உதாரணமாக:—'பொருள்வயிற் பிரிகிறேன்' என்றிருத்தற்குரிய வியாக்யானத்தொடரை, 'பொருளவைபிற் பிரிகிறேன்'

(பெரியதிருமொழி. 9—3—2) என்றும், 'நானவல் அப்பம்' என்ற தொடரை 'நான் வல அப்பம்' (ஷை 10-5-6) என்றும் பின்னோர் பிரித் திடர்ப்பட்டமை ஒப்பிடத்தக்கது. இவற்றுள், பொருள் வயின் என்பதில் வயி என்பது வை என ஓசையொப்புமையால் மாறியதுபோன்றதே தகைத்த என்பது தகப்த்த என மாறியதும் என வுணர்க. பரிபாடல் உரைப்பாயிரத்தில்,

"எழுதினர் பிழைப்பும் எழுத்துரு வொக்கும்
பகுதியின் வந்த பாடகர் பிழைப்பும்
திருந்திய காட்சியோர் செவிமுதல் வெதுப்பலின்
மதியின் றிகைப்பு விதியுளி யகற்றி"ப்

பரிமேலழகர் அந்நூற்கு உரையிட்ட அருமையை அவர்காலத்து அபியுக்தரொருவர் பாராட்டியிருத்தலும் காண்க.

27. இனி, இப்பாடலைக்கொண்ட பதிகமுழுதினும்—

"வதரியாச்சிராமத்துளானே"

என்றே திருப்பதியின்பெயர் வழங்குகின்றது. இப்பெயர் வழக்குப் பற்றித் திவ்யார்த்ததீபிகையில்,

(ஆச்சிராமம் என்பதனுள்)—"ரா என்று நீட்டவேண்டிய காரண மொன்றும் இல்லை, 'பதரிகாச்ரமம்' என்ற வடசொல், வதரியாச்சிரமம் என்று திரியுமேயன்றி, ரகரம் நீண்டுவரக் காரணமில்லை............ஆயினும் (பெரியோர் வழங்குவதால்) அப்பாடத்தையே ஆதரிக்கமுற்பட்டோம்"

என்று எழுதப்பட்டுள்ளது. இதனால், ஆச்சிராமம் என்ற வழக்குத் தவ றுனதாயினும் பெரியோர்பாடம் என்று தீபிகையாசிரியர்கருதினர் என்பது தெரியலாம். இவ்வாறு, ஆச்சிராமவிஷயத்தில் எவரும் சிர மங்கொள்ளவேண்டிய அவசியமில்லை. வடமொழி தென்மொழிச் சொற்றொடர்களிலே, இடையில்வரும் அகரம்நீண்டு மரூஉவாய் வழங்குவது தொன்றுதொட்ட தமிழ்வழக்கேயாம். காண்டா வனம், இட்டாதெய்வம், வாிச்சிராவணன் முதலாக ஆழ்வார்கள் வழங்கியுள்ளமை காண்க. வயிச்சிராவணன் என்ற சொல்வழக்கை

முன்னோர் அருளிய வ்யாக்யானக்குறிப்பும் நன்கு வலியுறுத்துகின்றது. [இக்குறிப்பை ஸ்வாமி இடைச்செருகலாகக்கொண்டது என்னோ?] உலகவழக்கிலும், காலாகாலம், சகாதேவன், கத்தாரிக்காய், அஞ்சாறைப்பெட்டி என, இடையில் அகரம்நீண்டு வழங்குதல் காணலாம். சிவதலங்களிலே திருஞானசம்பந்தமூர்த்திநாயனார், சுந்தரமூர்த்திநாயனார்—இருவராலும் பாடப்பெற்ற திருப்பதியொன்று, பாச்சி லாச்சிராமம் என்ற பெயர்பெற்றிருத்தலும், தேவாரத்தில்,

"பாச்சி லாச்சிராமத்துறைகின்ற சங்கொளிவண்ணர்"

"பாச்சி லாச்சிராமத்தெம் பரமர்"

என்று இவ்வாறே, அந்நாயன்மார்களால் பதிகமுழுதும் பாடப்பெற்றிருத்தலும் மேற்கூறிய உண்மையைக் கரதலாமலகமாக்குவனவாகும்.

28. ஷை 9, 5, 7-ஆம் பாசுரத்தில்—

—"தேவ ரொருவ ரிங்கே புகுந்தென்
அங்க மெலிய வளைகழல ஆதுகொலோவென்று சொன்னபின்னை
ஐங்கணை வில்லிதன் னாண்மையென்னோ டாடும்"

என்ற அடிகளில், 'ஆதுகொலோ வென்று' என்ற தொடர்,

'யா(ஆ)துகோலோவொன்று'

என்று திருத்தம்பெறத்தக்கது. தேவரொருவர் இங்கு எழுந்தருளி, ஏதோ ஒன்றை என்னிடஞ்சொல்லிச் சென்றபின்பு, 'என் உடலம் கிருசமாயிற்று. காமவேதனை மிக்கது' என்பது கருத்து. இப்பாடமே பெரியவாச்சான்பிள்ளை திருவுள்ளம் என்பது—

"(அங்கம் மெலிய வளை கழல) ஒன்று சொன்னாராயிற்று; பிரிவைப் பிரஸங்கித்தாராக இவை (அங்கம் வளைகள்) தன்னடைவே போய்க்கொடு நின்றது. (யாதுகொலோவொன்று) பிரியேன் என்கிற பாசுரத்தாலே பிரிவை உணர்த்தினாயிற்று; வ்யதிரேகத்தாலே அறிந்துகொள்ளுகிறாள் என்று. அதுவும் வாய்கொண்டு சொல்லமாட்டாமை 'யாதுகொலோ' என்கிறாளாயிற்று இவள்"

என்ற வ்யாக்யானத்தொடர்களால் அறியப்படும். "ஒன்று சொன்னார், அதனால் அங்கம் மெலிய வளைகள் கழன்றன. அங்ஙனம் சொன்னசொல்லும் உடன்பாடன்றி மறைவினையான தொன்று (பிரியேன் என்பது) அதுவும் வாயாற்சொல்லி யாற்றுந் தரத்ததன்று"—என்பது போந்தபொருள்.

திவ்யார்த்ததீபிகைக்காரர்—"ஆது கொலோ என்று சொன்ன பின்னை - அப்படிப்பட்ட பிரிவை உணர்த்தினது முதலாக" என்று பதவுரையிலும், "'ஆதுகொலோவென்று'—அது என்பது ஆது என நீண்டுகிடக்கிறது; 'உன்னை ஒருநாளும் விட்டுப்பிரியமாட்டேன்' என்று காதலர்கூறும் வார்த்தையுண்டே, அதுவே இங்கு விவக்ஷிதம்" என்று விசேஷவுரையிலும் எழுதியுள்ளார். இப் பதபாடம் பெரியவாச்சான்பிள்ளை எழுதாதது. மூலத்தொடர்க்கோ, வ்யாக்யானபங்திக்கோ இப் பதவுரைகருத்துரைகள் எவ்வாறு பொருந்துவன என்பதும் தெரியவில்லை. மேற்கூறிய வ்யாக்யானபங்திகளையும் அதன் கருத்தையும் ஆராயும் அறிஞர்க்கு 'யாதுகொலோ ஒன்று' அல்லது 'ஆதுகொலோவொன்று' என்பதே ஆழ்வாராசாரியர்கள் திருவுள்ளமான பழம்பாடமென்பது மிகத் தெளிவாகும். ஆது - யாது. (பெ. திருமொழி. 9-3-9.)

29. திருமங்கையாழ்வார் அருளிய திருவெழுகூற்றிருக்கையில், 'கற்போர் புரிசெய் கனகமாளிகை' என்று பாடமும், அதற்கு 'வித்வான்கள் படுகாடுகிடக்கும் நகரி', 'பொன்னாலே செய்யப்பட்டமாளிகை' என்று வ்யாக்யானமும் காணப்படுகின்றன. திவ்யார்த்ததீபிகையாசிரியரும் இங்கு—"பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்திக்குத் தகுதியாகப் புரிசெய் என்ற பாடம் கொள்ளத்தக்கது......கற்போர்களுடைய புரியாகச் செய்யப்பட்டதென்க" என்று குறிப்பெழுதியுள்ளார். ஆனால் இவ்வாசிரியர்திருவுளப்படி, 'புரிசெய்' என்று, பெரியவாச்சான்பிள்ளை பதபாடம் குறிக்கவில்லை.

கற்போர் புரி (-வித்வான்கள் வாழும் நகரி) என்றும், செய்கனக மாளிகை (-கனகம்செய் மாளிகை) என்றுமே அப்பெரியார் பிரித்துப் பொருள் எழுதினர். இது கிடக்க. இனி, பெரியதிருமொழி 5-1-4-ஆம் பாசுரத்தில்,

'கற்பார் புரிசை செய்குன்றம் கவினார்கூடம் மாளிகைகள்'

என்று அவ்வாழ்வாரே அருளியதிலும் 'கற்பார்புரிசை' என்று இதனோடொத்த தொடரைக் காணலாம். 'தொழில் மிக்கிருந்துள்ள புரிசை' (-மதில்)என்பது, இதற்குப் பெரியவாச்சான்பிள்ளை அருளிய வ்யாக்யானம். இத்தொடரே சிறிதுமாறித் திருவெழுகூற்றிருக்கையிலும் பயில்வதாயிற்று என்றும், அதனால் 'கற்போர்புரிசை' என்ற பாடமே திருமங்கைமன்னன் திருவுள்ளமென்றும் கொள்ளக் கூடுமன்றோ? இவற்றால், 'கற்போர் புரிசெய்' என்ற திருவெழுகூற்றிருக்கைப்பாடமும், அதற்கமைந்த வ்யாக்யானத் தொடர்களும் பெரியவாச்சான்பிள்ளைகருத்துக்கு மாறானவையென்றும், "கற்போர் புரிசை - தொழில் ஓரப்படுதற்குரிய மதில்" என்று பாடமும் பொருளும் முன்பு அமைந்திருந்தவையே பின்னோரால் மாற்றப்பட்டன என்றும் கருத இடந்தருகின்றது. இப்பாடமும் பொருளும் வேறு வ்யாக்யானமொன்றில் காணப்படுவதாக, தீபிகையாசிரியர் குறிப்பிட்டிருப்பதும் அறியத்தக்கது.

30. திருவிருத்தம் 61-ஆம் பாசுரத்தில்—

"ஞாலமுற்றும்,
வேயகமாயினுஞ் சோரா வகையிரண் டேயடியால் தாயவன்"

என்பதில் 'வேயகமாயினும்' என்பது 'ஏயகமாயினும்' என்றிருத்தல் மோனைக்கு மிகவும் சிறக்கும். ஏயகம் - அம்புக்குத்திடம்; மயிர்க்குத்திடம், அம்புக்குத்திடம், கோற்குத்திடம் என்ற தொடர்கள், இடச்சிறுமைகுறிக்க வழங்குவன. வேய்ங்கழிபோலவே, அம்பும் கோல் என வழங்குவதேயாம். 'பிழையார் தாம்

தொடுத்த கோல்' என்றார் குறிஞ்சிக்கலியிலும் (39). 'ஐங்கோலை வென்று முக்கோலைக் கைக்கொண்டவன்' என்றார் பின்னோரும். ஆதலால், வேயகம் எனினும் ஏயகமெனினும் கோற்குத்துநிலம் என்ற பொருளொற்றுமை உடையதேயாம். ஆனால் 'ஏயகம்' என்ற பாடம் மோனையின்பமுடையதாதல் கண்டுகொள்க. திவ்யார்த்த தீபிகைகாரரும் மோனைநயம்பெறப் பாடாந்தரங்களைக் கண்டு கூறியுள்ளது ஒப்பிடத்தகும். (பெரிய திருவந்தாதி, 24; திருவிருத். 42. உரை).

31. பெரியதிருவந்தாதி 14-ஆம் பாசுரத்தில்

"..............................நீயார் போய்த்
தேம்பூண் சுவைத்தூ னறிந்தறிந்தும் தீவினையாம்
பாம்பார்வாய்க் கைநீட்டல் பார்த்தி"

என்று இப்போது ஓதப்பட்டுவருகின்றது. திவ்யார்த்ததீபிகையாசிரியரான ஸ்வாமியும், இப்பாடத்தை ஏற்றுக்கொண்டே உரையிட்டருளினர். இதனால் வெண்பாவீறு 'பார்த்தி' என முடிவது தமிழ்விதிக்கு முற்றும் மாறானதென்பது, அவ்வாசிரியர் அறிந்ததன்று என்றே தோற்றுகின்றது. அறிந்ததாயின், தம் திருப்பாவையுரைத்தொடக்கத்தில், தாமேபாடிய வெண்பாவின் ஈற்றடியை—

"அடியேனுக் காரினிநே ராவார்"

என்று ஒருகாலும் அமைத்திரார் என்பது திண்ணம்.* வெண்பாவீறு, நாள் மலர் காசு பிறப்பு என்ற வாய்பாடொன்றால் இறுவதும், அவற்றுள் காசு பிறப்பு இரண்டும், குற்றுகரமாகவும் சிறுபான்மை

*முதற்றிருவந்தாதி 97-ஆம் வெண்பா ஈற்றடி, 'புனற்கங்கை யென்னும் பெயர்ப்பொன்' என்றும் பாடம் வழங்குவதென்றும், இதனில் 'தளை தட்டுதல் இல்லையாயினும் மோனையின்பம் குறையுறுகின்றதென்க.' என்றும் தீபிகையாசிரியர் எழுதியுள்ள குறிப்புரை மேற்கூறியதை வலியுறுத்தும்.

முற்றுகரமாகவும் முடிவதுமே விதி. ஆழ்வார்கள் திருவாக்குக்களிலும் வேறெந்த நூல்களிலும் இவ்விதிவரம்பு மீறப்பட்டதில்லை. 'பார்த்தி' போன்றவற்றை ஆர்ஷமாகக்கொண்டு சிலர் வழுவமைப்பது, ஆழ்வார் திருவாக்குக்களை, விதிக்கடங்காத சித்தர் பாடலாக்க முயல்வதேயாகும். ஆகவே, 'பார்த்தி' என்று ஓதும் பாடத்தைப் 'பார்த்து' என்று திருத்தம்பெற ஓதல்வேண்டும்.

இத்திருத்தம் பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானத்துக்கு விரோதமானதே அன்று. 'பாம்பின்வாய்பார்த்துக் கைநீட்டல் நீ' என்று அந்வயித்து, நீட்டலைச்செய்யும் நீ என்று திருவுளங்கொண்டு 'நீட்டுவார்போலேயிருக்கிற நீ' என்று அப்பெரியார் உரையருளினர். தீபிகையாசிரியர், 'பார்த்தி - முடியப்பார்க்கிறாய்' என்று எழுதிய பொருள், பெரியவாச்சான்பிள்ளை கூறாததேயாம். அவரது வ்யாக்யானமுடிவில் 'கிட்டுகிறாயன்றோ' என்பதற்கு, பாம்பின்வாயிலே கைநீட்டக் கிட்டுவார்போலே, கிட்டுகிறாயன்றோ என்பதே பொருள் எனக. இனி, கைநீட்டல் (நீட்டுகிறது) யார்? என்று இயைத்து உரைப்பினும் அமையும். 'அங்கே கதவைத் திறத்தல் யார்' என்ற வழக்குங் காண்க.

இவ்வாறு, வெண்பாவீறு மரபுசிதையாமற் காக்கப்படவேண்டியதுபோலக் கட்டளைக்கலித்துறையீறும் காக்கப்படவேண்டியது ஒன்றுண்டு.

32. திருவிருத்தம் 40-ஆம் பாசுரத்தின், 3,4-ஆம் அடிகள்—

'ஞாலப்பொன் மாதின் மணாளன் துழாய்நங்கள் சூழ்குழற்கே
ஏலப் புனைந்தென்னை மாரென்னை நோக்குவ தென்றுகொலோ'

என்று இப்போது ஓதப்படுகின்றன. இவ்வடிகளினீற்றில் 'என்றுகொலோ' என வந்துளது, புதுமையேயாம். கட்டளைக்கலித்துறையீறு இவ்வாறு வருவதை அருளிச்செயல்களிலோ, தமிழ்நூல்களிலோ எங்குங் கண்டதில்லை. அது ஏகாரமாகவே முடிதல் விதி.

ஆனால் தீபிகையாசிரியர்—'என்றுகொலோ' என்பதையே ஆதரிக்கிறார். இவ்வாதரவுக்குப் பெரியவாச்சான்பிள்ளையின் 'பதபாடம்' கிடையாது. இனி, 'என்றுகொலே' என்ற பாடமும் உண்டென்பர். இதற்கு, என்றுகொல்—என்றோ; ஏ-கட்டளைக்கலித்துறை யிறுதியசை என்க. யாப்புவிதிக்குமாறாக என்றுகொலோ என்பதைக் கொள்வதினும், இப்பாடம் கொள்ளலாகும்.

ஆயினும், 'கொலே' என்ற வழக்கு அருகியதேயாம். ஏட்டெழுத்தில், ககரசகரங்கட்குள் பெரும்பான்மை எழுத்தொப்புமை உண்டு. அதனால், பாடமயக்கம் நேர்தல் இயல்பே. அம்முறையில், 'என்று சொலே' என்பது 'என்று கோலே' என்று பாடங் கொள்ளப்பட்டதுபோலும். என்று சொல்லே - எந்நாள் சொல்லுக எ-று. 'தன்கிளியைச் சொல்லே என்று' திருமங்கைமன்னன் அருளியதும் ஒப்பிடுக. ஆயின், நேரிழையீர்......சொல்லே' என்று முடிந்துளதே எனின்,

> "என்னீ ரறியாதீர்போல இவைகூறின்
> நின்னீர வல்ல நெடுந்தகாய்"

> "பேசில் நங்காய்; மாமாயன் என்மகளைச் செய்தனகள்
> மங்கைமீர் மதிக்கிலேனே" (பெரியதிரு. 5-5-4)

என்ற இடங்களிற்போல, ஒருமைபன்மை மயக்கமாகக்கொண்டு அமைத்துக்கொள்ளத்தகும்.

[தொடரும்]

ஸ்ரீ:

செய்ந்நன்றியறிதலும் கம்பரும்

(௨௫௮-ஆம் பக்கத் தொடர்ச்சி)

[ஸ்ரீ. ஜெ. நாராயணசுந்தரமையங்காரவர்கள்]

இராமபிரான் தன்னேரில்லாத்தலைவனாதலை வான்மீகிமுனிவன் வெளிப்படுத்தியிருப்பது, அவனது காப்பியப்பயிற்சியுடையார் அறிவர். அம்முனிவன், தொடக்கத்தில், இவ்வுலகத்தில், இப்பொழுது, எவன் சீலமென்னும் குணத்தையுடையவன்? எவன் வீரியமுடையவன்? எவன் அறத்தை அறிந்தவன்? எவன் செய்ந்நன்றியறிபவன்? எவன் சத்தியவசனத்தையுடையவன்? எவன் உறுதியான விரதத்தையுடையவன்? எவன் நல்ல சரித்திரத்தையுடையவன்? எவன் பூதப்பொருளனைத்திற்கும் நல்லன்? எவன் அறிவன்? எவன் சமர்த்தன்? எவன் எக்காலத்தும் காட்சிக்கினியன்? எவன் தன்னையறிந்தவன்? எவன் வெகுளியை வென்றவன்? எவன் காந்தியுள்ளவன்? எவன் அசூயையற்றவன்? போரிற் கோபத்தை ஏறிட்டுக்கொண்ட எவனுக்குத் தேவரும் அஞ்சுவர்? என்று நாரதமுனிவனை வினவி, இத்தகைய குணங்களெல்லாம் பூரணமாய் நிரம்பப்பெற்ற புருடோத்தமன் இராமபிரானென்பது விடையாகப்பெற்றனன்.* பெற்றவன், அவனே பாடற்கொத்தவனென்றுகொண்டு ஆதிகாவ்யமெனப்படும் இராமாயணத்தை இயற்றினன்.

இறைமைக்குணங்களுள் ஒருசிறிதும் பெறாது, இழிகுணவியல்பே மிக்குடைய மனிதர்பிறரைப் பாடிப் பயனிழக்கும் கவிகள்போலாது இம்முனிவன் பாடற்கொத்த தலைமகனை நாடியறிந்து பாடி வெளிப்படுத்த இது நம் கவிச்சக்கரவர்த்தியாரின் உள்ளத்தைப் பிணித்துள்ளது. அதனால்,

---

*𑌕𑍋 𑌨𑍍𑌵𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌸𑌾𑌮𑍍𑌪𑍍𑌰𑌤𑌂 𑌲𑍋𑌕𑍇 𑌗𑍁𑌣𑌵𑌾𑌨𑍍 𑌕𑌶𑍍𑌚 𑌵𑍀𑌰𑍍𑌯𑌵𑌾𑌨𑍍 ।

𑌧𑌰𑍍𑌮𑌜𑍍𑌞𑌶𑍍𑌚 𑌕𑍃𑌤𑌜𑍍𑌞𑌶𑍍𑌚 𑌸𑌤𑍍𑌯𑌵𑌾𑌕𑍍𑌯𑍋 𑌦𑍃𑌢𑌵𑍍𑌰𑌤𑌃 ॥

என்று தொடங்கிச்செல்லும் வான்மீகிராமாயணப்பகுதியால் இதனை அறியலாம்.

இவர் அம்முனிவனை மஹோபகாரியாகக்கருதியுள்ளார். அம் மனவியல்போடு அவனைத் தம் காப்பியத்திற் போற்றியுரைக்கின்றார். இதற்கு உதாரணமாக ஒருசில உரைக்கப்படும்.

'வாங்கரும் பாதம் நான்கும் வகுத்த வான்மீகி யென்பான்
தீங்கவி செவிக ளாரத் தேவரும் பருகச் செய்தான்
ஆங்கவன் புகழ்ந்த நாட்டை அன்பெனும் நறவம் மாந்தி
மூங்கையான் பேச லுற்றான் என்னயான் மொழிய லுற்றேன்'

என்பது, கம்பர் வான்மீகியைச் சிறப்பித்துரைக்கும் கவிகளில் ஒன்று. இதனுள், அம்முனிவனாற் புகழப்பெற்றமையாற் கோசலநாட்டின் ஏற்றம் விளங்குவதாயிற்றென்பது பெறவைத்துள்ளார். அதனுடன், அவன் உள்ளவாறு உணர்ந்துரைக்கவல்லவனென்பதனையும், தம் குறையையும் புலப்படுத்தியுள்ளார்.

பாதங்கள் நான்குமாவன; ஏகபாதம் (ஒருகால்) ஆகிய இவ்வுலகின் றொகையும், திரிபாதம் (முக்கால்) ஆகிய மேலுலகுமாம். இங்ஙனம் நான்கு பாதங்களாக இவ்வுலகங்கள் வகுக்கப்படுதல் வேதத்திற் கண்டது. இவற்றை வகுத்தவனென்றது, இவ்வுலகங்களின் இயல்பெல்லாம் அறுதியிட்டவன் என்றவாறு. இதனால் 'இருமைவகைதெரிந் தீண்டறம் பூண்டவன்' என்றபடியாயிற்று.

'சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு'

என்றாங்கு உலகங்களின் இயல்பனைத்தும் இவனுடைய அறிவின்கண் அடங்கிநிற்றல் இதனாற் பெறப்படும். வான்மீகியென்பது, புற்றுமூடும்படி நின்று செய்த அருந்தவமுடையவனென்பது புலப்படநின்றது. அது, பாதம் நான்கும் வகுத்தற்குரிய ஏதுத்தோன்றநின்றவாறு. 'நொய்தின் நொய்ய சொல்' என்று தொடங்கும் அவையடக்கச்செய்யுளிலும் இப்பெற்றியே, இவனை இவர் 'செய்த செய்தவன்' என்றது இங்கு ஒப்புநோக்கியுணரத் தகும். என்பான் என்பது என்று சிறப்பித்துச் சொல்லப்படுபவன் என்னும் பொருளுடையது; 'ஊர் எனப்படுவது உறையூர்' என்புழிப்போல. இவ்வாற்றால், நிரதிசயமான முக்காலையும், மற்றையதான ஓர்காலையும், தன் தவவலிமையால் அறுதியிட்டுயர்ந்த வான்மீகிமுனிவன், புகழ்ந்துரைத்தற்

கொத்த அம் முக்காலைவிட்டு, இவ் வோர்காலினும் ஏகதேசநிலமான கோசல நாட்டை அது, சீர்மை முதலான எல்லாக்குணங்களும் பிரகாசிக்க அவ தரித்த புருடோத்தமனென்று துணியப்பட்டவனாகிய இராமனுக்கு இருக்கை யாதல்கொண்டு, அம்முக்காலினும் புகழ்தற்கொத்ததாதல் கண்டு, புகழ்ந்து, 'தீங்கவி செவிகளாரத் தேவரும் பருகச்செய்தான்' என்றவாறாயிற்று. சீர்மையாவது சௌலப்பியம்

'முக்காலோர் காலுக்கு மூரிச் சிறப்புடைத்தென்
றெக்காலும் பேச எழாரங்குப்—புக்காரும்
வண்டிருக்கப் பெற்ற வருகவிரா மன்பவனி
கண்டிருக்கப் பெற்றார் களேல்'

என அவைத்தலைவரவர்களுடைய பெரியபிதா அவர்கள் பாடிய பாடல் இங்கு ஞாபகத்துக்குவருகிறது. இச்செய்யுள் இங்கு ஒப்பிட்டுநோக்கிக் கொள்ளத்தக்கது.

இராமனுக்குப் பரத்துவநிலையினும், மற்றைய அவதாரங்களினும், நம்மாழ்வார் ஏற்றமுரைப்பதாக ஆன்றோர் கூறுவர். அது பின்னர்ப்பெறப் படும். அங்ஙனமாதலால், அவனது பரத்துவநிலைக்கிடனாகிய பரமபதத்தி லும், இவ்விபவநிலைக்கிடனாகிய இந்நாடு ஏற்றமுடைத்தாயிற்றென்க. பரத் துவநிலையில் பகவத்குணானுபவம்பண்ணியிருக்கும் அயர்வறுமமரர்களும், அவ்வநுபவத்தை விடுத்து, இவ்விபவநிலையில் அவனது குணானுபவம்பண்ணு தலைப் பெரிதும் விழைவர் என்பர் நம் கவிச்சக்கரவர்த்தியாரும். இதனை

'வரம்பில், எவ்வுலகத்தோர் யாவரும் தவஞ்செய் தேறுவான் ஆதரிக்கின்ற
அவ்வுலகத்தோர் இழிவதற் கருத்தி புரிகின்ற தயோத்திமா நகரம்'

என, அயோத்திமாநகரை அவர் சிறப்பித்ததனால் அறியலாம். பரத்துவநிலை யில் மேன்மையே காணப்படுவதல்லது, சீலம் முதலிய உயர்குணங்கள் யாவும் நன்கு பிரகாசிப்பது, இவ்விபவநிலையிலன்றோ? தனது மேன்மை பாராது தாழ்ந்தவரோடு புரையறப் பரிமாறுகையாகிய இச் சீலமென்னுங் குணமன்றோ எங்கும் ஆன்றோராற் பெரிதும் எடுத்துப்பாராட்டி அநுபவிக்கப் படுகின்றது! குணம் என்பது பொதுவாக எல்லாநற்குணங்களையும் குறிப்ப தன்றியும், சிறப்பாக இக்குணத்தைக் குறித்துநிற்பதும் உண்டு. 'எவன் குணவான்?' என்று வான்மீகிமுனிவன்வாக்காலும் முன்னர்க் காட்டப்பட்ட

‘வஶீ’ என்று தொடங்கும் ஸ்தோத்ரரத்நச்சுலோகத்திற் ‘குணவான்’ என்றதனாலும் இங்ஙனம் இது குறிக்கப்படுதலை அறியலாம். இங்ஙனம் குறிப்பதும் இதன் ஏற்றம் காட்டுமன்றோ? இத்தகைய சீலம் முதலிய குணங்கள் பிரகாசிப்பது இங்காதலால், அங்குள்ள அயர்வறு மமரர்களும் இங்கு வந்து இராமகுணாநுபவம்பண்ணுதலை விழைவாராயினரென்க.* இக்கருத்துப்பற்றியே, வான்மீகியென்பான் தேவரும் பருகும்படி தீங்கவிசெய்தானென்றார் எனக் கொள்க. இங்குத் தேவரென்றது, பரமபதத்தில் பகவத்குணாநுபவம்பண்ணியிருக்கும் அயர்வறுமமரர்களை. உம்மை உயர்வுசிறப்புப் பொருளது. அது, அவ்வுலகத்தில் பகவத்குணாநுபவமேபண்ணியிருக்கும் அவரும் அதனைவிடுத்தல் தோன்றநின்றது. அவர் அவ்வநுபவத்தையும் விடுத்து இவ்விராமாயணத்தால் இராமகுணாநுபவம்பண்ணுதல் கூறினமையால் இதன் ஏற்றத்தை நன்கறியலாம். அங்ஙனம் அவர் வான்மீகியின் கவியைச் செவிகளாரப்பருகுதற்கு ஏது, அவனுடையகவி தீங்கவியாயிருந்தலாம். இதனாலேயே தீங்கவிபருகச்செய்தானென்றார். தீங்கவியாவது இனிய கவி. இங்கு இனிமையாவது சொல்லும் பிற பொருளும் பற்றிய இனிமை மட்டுமேயன்று: மேலுரைத்தவாறு எவ்வாற்றானும் ஈடற்ற பிரும்மானந்தமேயான இராமனது புகழமுதைக்கொண்டுநிற்றலாலாகிய இனிமையுமாம்.

---

* ‘வையத்து வாழ்வீர்காள்’ என்று தொடங்கும் திருப்பாவைப் பாசுரப் பகுதியில், வையத்துவாழ்வு என்றதுபற்றி வருகின்ற மூவாயிரப்படி வியாக்கியானப்பகுதி இங்கு நோக்கத்தக்கது. ‘இங்குத்தைவாழ்ச்சிக்குப் பரமபதமும் ஸத்ருஶமன்று. அங்கு மேன்மை காணலாமித்தனை, போக்கி, நீர்மை கண்டநுபவிக்கலாம்படியிருப்பது இங்கேயிறே. அங்கு, போக்தாக்கள் அஸங்குசிதராயிருப்பர்கள். இங்கு, போக்யம் அஸங்குசிதமாயிருக்கும். தயநீயருண்டானவிடத்திலேயிறே தயாதிகுணங்கள் அநுபவிக்கலாவது. அங்கு விஷயமில்லாமையாலே தயாதிகுணங்கள் ப்ரகாசிக்கப்பெறாதே. அக்குறை தீருகைக்காகவிறே நித்யஸூரிகள் இங்குவந்து அநுபவிக்கிறது. அவதாரத்தில் நீர்மையிலே அகப்பட்டார்க்கும் மற்றோரிடம் பெறாதபடியாயிருக்கும்’ என்பது அப்பகுதி. மற்றும் இப்பெற்றியே, அப்பிரபந்தத்தின் முதற் பாசுர வியாக்கியானத்தில், ‘சீர்மல்கும்’ என்றதுகொண்டு ஸௌலப்ய குணத்தால் வஸ்துவுக்கான உயர்த்தியைப்பற்றிப் பாரித்துரைத்த பகுதியும் அன்ன பிறவும் இங்ஙனே கண்டுகொள்க.

இவ்வினிமையே தேவரைப் பிணிப்பதாயிற்றென்க. செவிகளார என்றது, இச்சிரவணானந்தத்தின் ஏற்றம்பெறநின்றது. பருகவென்றது, இச்சிரவணத்தில் அவர்கட்குள்ள ஆதராதிசயத்தைக் காட்டிநின்றது. இங்ஙனம் அவன் வெளியிட்டதே தம்மையும் பிணித்துவிட்டதென்பார் 'அன்பெனும் நறவம் மாந்தி...யான் மொழியலுற்றேன்' என்றார். அவ்வாறு அவன் வெளிப்படுத்தியது, சொல்லும்வன்மையில்லாத ஊமன்போன்ற தாம், அன்பென்னும் கள்ளை மாந்தியதனால் அங்ஙனம் தாம் செய்யமுடியாத தென்பதனையும் எண்ணாது, அந்நாட்டைப் புகழத்தொடங்கிப் பிதற்றும் படிசெய்துவிட்டதென்பார் அன்பெனும் நறவம் மாந்தி மூங்கையான் பேச லுற்றான் என்ன யான் மொழியலுற்றேன்' என்றார். இவர், அவையடக்கத்தில் 'பத்தர் சொன்னவும் பன்னப்பெறுபவோ?' என்றது இங்கு நோக்கத் தக்கது.

இவ்வாற்றால், வான்மீகிமுனிவன் இராமபிரானது நற்குணக்கடலாடுதல் நன்று என்பதனை வெளிப்படுத்திய மஹோபகாரியாவாரென நம் கம்ப நாடர் போற்றினாராதலை ஒருவாறுணராலாம். இங்ஙனமாகவே, உயர் பொருளை உலகிற்குத் தந்து உதவுதற்கான அம்முனிவனுடைய பெருமையும், அவனால் வெளியிடப்பட்ட பொருளின் உயர்வும், அவன்பால் இவர் கொண்டுள்ள உயர்மதிப்பும் விளங்கும்படியாக

'நொய்தி னொய்யசொல் நூற்கலுற்றே னெனை
வைத வைவின் மராமரம் ஏழ்துளை
எய்த எய்தவற் கெய்திய மாக்கதை
செய்த செய்தவன் சொல்நின்ற தேயத்தே' என்றும்,

'வைய மென்னை யிகழவும் மாசெனக்
கெய்தவும் இதியம்புவ தியாதெனில்
பொய்யில் கேள்விப் புலமையினோர் புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே'

என்றும் இவர் கூறியிருக்கும் அவையடக்கச்செய்யுட்களும் சிந்தித்துக் கொள்ளத்தக்கன.

இனி, இங்ஙனம் வடநூன்முனிவனாகிய வான்மீகிபகவானை மஹோபகாரியாதல் துணிந்து போற்றியதுபோல, உலகுய்யும்படி வேதத்தைத் தென்றமிழ்ப்படுத்திவிளம்பிய பிரபந்தகுலமுதல்வராகிய நம்மாழ்வாரையும் அவ்வாறே இப்புலவர் துணிந்துபோற்றுமாறும், அங்ஙனம் இவர் துணிதற்கு ஆதாரமாக அவ்வாழ்வாரதுகூற்று இருக்குமாறும் சற்று ஆராயப்படும்.

'கற்பார் இராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ!
புற்பாமுதலாப் புல்லெறும்பாதி ஒன்றின்றியே
நற்பால் அயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும்
நற்பாலுக் குய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுளே'

என்பது, இவ்வாழ்வார் எம்பெருமானுடைய ஏற்றம் மிக்க இயல்பெடுத்துரைத்து அநுபவிக்கும் பாசுரங்களில் ஒன்று. இப்பாசுரம், திருவாய்மொழியினது ஏழாவதுபத்திலுள்ள ஐந்தாந்திருவாய்மொழியின் முதற்பாசுரமாகும். இப்பத்தினால் எம்பெருமானுடைய குணம் செயல்களைக்கூறியநுபவிக்கும் ஆழ்வார், இம் முதற்பாசுரத்தால் இராமாவதாரவைபவம் கூறியநுபவிக்கிறார். பரத்துவத்தையும் பிற அவதாரங்களையும் விட்டு இராமாவதாரத்தை முதலில் எடுத்தது சிந்திக்கத்தக்கது. இதனாலேயே, ஆன்றோர் இப்பாசுரமடங்க எல்லாம் இராமகுணாநுபவமாகவே உரைத்தனர். இக்கருத்தாலேயே, பின்வரும்பாசுரங்களிற் கூறப்படும் உலகுபடைத்தல் உலகளத்தல் முதலிய இறைவனுடைய பிறசெயல்களும் இராமனது சம்பந்தமுடைமைபற்றி அநுபவித்ததாகவும் உரைத்தனர். இன்றேல், எல்லாம் இராமகுணாநுபவமாதல் கூடாமையறிக. இங்ஙனமாதல்கொண்டே 'மற்றும் கற்பரோ' என்ற இடத்து 'மற்றும்' என்றது தேவதாந்தரங்களைக் கழிக்காது அடையப்படும் பொருளையும் கூறிட்டு, அப்பொருளின் பரத்துவநிலையையும் இராமாவதாரமொழிந்த அவதாரங்களையும் கழித்ததாக உரைத்ததும் காணத்தகும். இராமாவதாரத்தின் ஏற்றத்தை ஆழ்வார் இங்ஙனம் வெளியிட்டிருப்பது, குறித்துக்கொள்ளத்தக்கது. இராமாவதாரம் பூரணாவதாரம் என்றும், மற்றைய அவதாரங்களிற் பிரகாசிக்கும் குணங்களெல்லாம் பகவானுடைய எல்லையில்லாத கல்யாணகுணங்களுள் ஏகதேசமேயாவனவென்றும் ஆன்றோர் கருதியிருக்கின்றனர். பட்டர் என்னும் பெரியார் இராமனது ஏற்றம் விளக்கியவாறும் முன்னே சுருக்கமாகக் கூறப்பட்டது. இனி இராமனது ஏற்றம் விளக்கும் இப்பாசுரப்பொருள் சிறிது நோக்கப்படும்.

இராமபிரான், நல்லதேசமாகிய அயோத்தியில்வாழும் முளைத்துப் பரம்பின புல்லும் சிற்றெறும்பும் முதலான சராசரம்முற்றவும், பிரும்ம தேவனாற் படைக்கப்பட்ட இவ்வுலகத்துள்ளே, அவை கன்மயோகாதி உய்யுமுபாயம் ஒன்றுமில்லாதிருக்கவும் நற்பாலிலே வைத்தனன். ஆதலால், கற்பார் அவ்விராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ! என்பது இதன் பிண்டப்பொருள்.

இதனால், இராமபிரானுடைய மஹோபகாரம், எல்லாப் பிராணிகளிடத்தும் மனக்கசிவுடைமை, ரமணீயத்துவம் முதலியன சொல்லப்படுகின்றன என்பர் ஆன்றோர். எவன் பூதப்பொருளனைத்துக்கும் நல்லன்? எவன் எக்காலத்தும் காட்சிக்கினியன்? என்ற வான்மீகிவினாக்களை இங்கு நினைத்துக்கொள்க.

இதனுள், 'புற்பாமுதலாப் புல்லெறும்பாதியொன்றின்றியே நற்பாலயோத்தியில்வாழும் சராசரம் முற்றவும் நற்பாலுக்குய்த்தனன் நான்முகனார்பெற்ற நாட்டுளே' என்றது 'கற்பார் இராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ' என்றதனைத் துணியவந்தது. 'நான்முகனார்பெற்ற நாட்டுளே' என்றது, நான்முகனாற் படைக்கப்பட்ட பிராகிருதவஸ்துக்களே தாரக போஷக போக்கியங்களாகக்கொண்டிருக்கக்கடவ இப்பிராகிருதிமண்டலத்திலேயே வைத்துக்கொண்டு என்றவாறு என்பர். 'நற்பாலுக்குய்த்தனன்' என்றது, திருநாட்டிலுள்ளாரைப்போலத் தன் திருவடிகளே தாரக போஷக போக்கியங்களாக இருக்கும்படிசெய்தனன்—மஹோபகாரியாய்த் தனதுகூட்டத்தில் இன்பமும் நீக்கத்தில் துன்பமும் உடையராம்படி நல்ல இயல்பிலே வைத்தனன் என்றவாறு என்பர். இவற்றால், திருநாட்டிலுள்ளநிலையை இந்நாட்டிலேயே தந்த மஹோபகாரி என்றவாறாயிற்று. 'ஒன்றின்றியே' என்றது, கன்மயோகாதி உய்யும் உபாயம் ஒன்றும் இல்லாதிருக்கச்செய்தும் அவ்வுபாயங்களால் அடையத்தக்கதை ஈந்த மஹோபகாரத்தைக் காட்டிற்று என்பர். எறும்பையும் புல்லையும் எடுத்துரைத்தது, சரங்களில் தாழ்ந்ததொன்றனையும், அசரங்களில் தாழ்ந்ததொன்றனையும் எடுத்தவாறென்பர். இங்ஙனம் இழிந்த புல்லும் எறும்பும் முதலாதச் சராசரமனைத்திற்கும் திருநாட்டிலுள்ளநிலையைத் தந்தான் என்றதனால் அப்பெருமானது மஹோபகாரத்தைப் பாராட்டியவாறுதல் காணலாம். 'நற்பாலயோத்தியில்' என்றது; தானே இராமபக்தியை

விளைவிக்கின்ற—இராமகுணங்கள் நடையாடுகின்ற இடமாகிய அயோத்தியில் என்றவாறு என்பர். அது யாவரும் இராமநாம அநுஸந்தானத்தை இடைவிடாது செய்திருக்குமிடமென்று ஆன்றோர் கூறுவர். அங்ஙனம் பிணிக்குமியல்பு அவனது ஏற்றம் காட்டுமன்றோ?

இவ்வாறு இராமபிரானுடைய இயல்பெடுத்துரைத்தவர், இத்தகைய இயல்பால் அவனே கற்றற்குரியவனுவான் என்கின்றார் 'கற்பாரிராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ!' என்றதனால். இதனால், கல்வியில் ஆதரமுடையார்க்கு அவ்விராமபிரானையொழிய அறியத்தக்கவர் ஒருவரில்லை என்றவாறுமென்பர். மற்றும், அவனது செயல்கள் இச்சமுசாரிகளுக்காகவேயாயிருக்க, அவர்கள் அவனையொழிய வேறொருவரையும் கற்பரோ என்று வியந்தவாறுமென்றும், புறம்பு கற்பது கல்விக்கு உடலன்று என்றவாறுமென்றும் உரைப்பர்; உரைக்கவே அவனது மஹோபகாரமும், அவனது நற்குணக்கடலாடுதலே சமுசாரிகளாற் செய்தற்கொத்ததாதலும் பெற்றும் என்க.

இதனுள், 'கற்பார்' என்றது தமக்குப் பிரியஹிதமானதொன்றை அநுஸந்திப்பார் என்றவாறு என்பர். 'இராமன்' என்றதனால் பிரியஹேதுவான ரமணீயத்துவமும், 'பிரான்' என்றதனால் அந்த ரமணீயத்துவத்தால் எல்லாவற்றையும் தனக்கே யுரியனவாக்கி, அந்த ரமணீயத்துவம் பிறர்க்கே பயன்படுமாறு ஹிதம்செய்து மஹோபகாரியாயிருத்தலும் பெறவைத்தவாறுமென்பர். பிரியஹிதமானதொன்றைக் கற்கநினைப்பார் இவனையே கற்பார் என்பதனை இதுவும் விளக்குவதாயிற்று. 'மற்றும்' என்றது, திருமாலினுடைய நிலையிலும் இவ்வவதாரமொழிந்த வேறவதாரங்களும் பரத்துவமுமே கழிக்கப்படுதல் முன்னரே சொல்லப்பட்டது. மற்றும் இவற்றின் அகலமெல்லாம் வல்லார்வாய்க் கேட்கற்பாலன. இங்குக் கூறியவற்றால், இராமபிரானது நற்குணக்கடலாடுதல் நன்றென்பதனை ஆழ்வார் வெளியிட்டிருத்தலை ஒருவாறுணரலாம்.

நம் கவிச்சக்கரவர்த்தியார், இப்பொருளெல்லாம் தெளிவுற ஓதியுணர்ந்தவராவர். இப்பெற்றியால், இப்பாசுரத்தில் இராமபிரானுக்கு இங்ஙனம் பிராதான்யம் கூறப்பட்டிருக்குமாறு கண்டே, இப்புலவர் இம்முறையே 'வானின்றிழிந்து' என்று தொடங்கும் தமது அயோத்தியாகாண்டத்துக் காப்புப்பாசுரத்தில், மாபூதத்தின் வைப்பெங்கும் அந்தரியாமியாயுள்ள

நாராயணனே இமையோர் இடுக்கண்காத்த கழல்வேந்தாகிய இராமனுவா னென்றது, அக்கழல்வேந்தாகிய இராமனே அந்தரியாமியாயுளன் என இராமனுடைய பிராதான்யம் விளங்கக்கூறினரென்னலாம். ஆழ்வார் உலகுபடைத்தல் முதலிய பிறவும் இராமனுடைய சம்பந்தமுடைமைபற்றி அநுபவித்ததுபோல, அந்தரியாமியாய்நிற்கும் பேரியல்பும் இங்கு இராம னுக்கு உடைமையாகக்கூறிக் கம்பரால் அநுபவிக்கப்பட்டதென்க. ஆழ்வார் அவனுடைய மஹோபகாரத்தையும் பிற உயரியல்புகளையும் பாராட்டி யநுபவித்ததுபோலவே, இப்புலவரும் அவற்றை இவ்விடத்தும் பிறவிடத் தும் பாராட்டி அநுபவித்தல் காணலாம்.

இங்ஙனம், ஆழ்வாருடைய பாசுரங்களும், அவற்றின் உட்பொருள் களும், அன்னபிறவும் நம் கம்பநாட்டாழ்வார் நன்கோதியுணர்ந்துள்ளாராத லால் அவற்றில் ஈடுபட்டு, அவற்றிடைத் தாம் கண்ட அரியபொருள்களையும் சொற்றொடர்களையும் தம் காப்பியத்திற் பல இடங்களில் அமைத்துச்செல் கின்றனர். ஆழ்வாரிடத்துக் கம்பருக்குள்ள ஈடுபாட்டை இது நன்கு காட்டு மன்றோ? இவ்வாறு சொல்லிச் செல்லலாலன்றோ, அவையடக்கத்திலே,

> 'துறையடுத்த விருத்தத் தொகைக்கவிக்
> குறையடுத்த செவிகளுக் கோதில்யாழ்
> நறையடுத்த அசுணநன் மாச்செவிப்
> பறையடுத்தது போலும் என் பாவரோ'

என, அவற்றிடைப் பயின்றார்க்குத் தனியாக ஒரு அவையடக்கச்செய்யுள் ஓதினரென்க. இதனுள், துறையடுத்த விருத்தத்தொகைக்கவி என்றது ஆழ் வாருடைய அருளிச்செயல்களை. மற்றும், இவ்வாறு அவர்கட்குத் தனியாக ஓரவையடக்கச்செய்யுள் ஓதியதும் ஆழ்வாரிடத்து இவர்க்குள்ள ஈடுபாட் டைக் காட்டுமன்றோ?

இன்னும், இவரியற்றியுள்ள 'சடகோபரந்தாதி' யென்னும் பிரபந்தத் தாலும் இவ்வாழ்வார்பக்கலிலே இவர் எத்துணை ஈடுபாடுடையராய்ப் போற்றுகின்றனர் என்பதனை நன்கறியலாம்.

மேலும், இவ்வாழ்வாரை மஹோபகாரியாதல் துணிந்து இங்ஙனம் ஈடுபட்டதனாலேயே, இப்புலவர் தம் பெருங்காப்பியத்தின் தொடக்கத்தில் முதலாவதாக இவனரப்போற்றிக் காப்புச்செய்யுள் கூறியிருக்கின்றனர்.

'தருகை நீண்ட தயரதன் தான்தரும்
இருகை வேழத் திராகவன் தன்கதை
திரிகை வேலைத் தரைமிசைச் செப்பிடக்
குருகை நாதன் குரைகழல் காப்பதே.'

என்பது அச்செய்யுளாகும். குருகைநாதன்—திருக்குருகூரில் அவதரித்த சடகோபன். 'திரிகைவேலைத் தரைமிசை'யென்றது, அழித்தற்குரியதாய்ச் சூழ்ந்துள்ள கடலிடைக்கிடந்த தரைமேல் என்றவாறு. எனவே, நில்லா வுலகம் என்றபடியாயிற்று. இதனால், இவ்வாழ்வார் நில்லாவுலகத்தினிடை நிலைத்ததொன்றை வெளிப்படுத்தி, ஒரு நிதிபோலத் தந்து, அதனைப்பற்றிப் பாடி உய்யச்செய்த மஹோபகாரியாதல் குறித்தவாறாயிற்று. இது, 'நான் முகனார்பெற்ற நாட்டுளே நற்பாலுக்குய்த்தனன்' என முற்கூறிய ஆழ்வார் கூற்றைப்போன்றது. 'செப்பிடக் குருகைநாதன் குரைகழல் காப்பதே' என்றது இவ்விராமகதையைச் செப்பவைத்த அவ்வாழ்வார்கழலே, அதனை இடையூறுநீக்கி இனிது செப்புதற்குக் காப்புமாகும் என்றவாறு. இவ்வாற்றால், இங்ஙனம் இவ்வாழ்வார் வெளிப்படுத்ததும் இப்புலவரது உள்ளத்தை இக்கதைசெப்பப்புகும்படி பிணித்துவிட்டதென்பதும் பெறுவதாகும். 'ஆசைபற்றி அறையலுற்றேன் மற்றிக் காசில்கொற்றத் திராமன் கதைய ரோ' என்பது இதனாலும் பொருந்துவதாதல் காணலாம்.

[தொடரும்]

கம்பராமாயணசாரம்

உத்தரகாண்டம்

[ராவ்ஸாஹிப். ஸ்ரீ. வே. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள் G.B.V.C.]

[உசுO-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

இராவணன் வருணன்நகரிற் பொருதல்

அவன், வருணனை வெல்லக்கருதி, மணிமதிநகரினைவிட்டுப் புறப்பட்டுப்போய், வருணன்வாழும் கன்னகிரிநகரை முற்றுகை செய்து, காலகேயரோடு நேர்ந்த போரில், அவர்களைக்கொன்று, தன் தங்கை சூர்ப்பநகையின்கணவனை வித்துருசிங்கனையும் கொன்றான். கன்னகிரிநகருள்ளே சென்று வெண்மேகசாலம்போலவும் வெள்ளியங்கிரிபோலவும் விளங்கின வருணன்மாளிகையைக் கண்டு, "ஒன்று தோற்றேனென்றுசொல்லல்வேண்டும்; ஒன்று போர் செய்தல்வேண்டும். இரண்டிலொன்றுசெய்யாமல் எங்கே ஒளித்திருக்கிறான் வருணன்" என்று கூறியபோது, வருணனுடைய குமாரர் படையோடுவர, இருபடைகளும் பொருதன. இராவணன் வருணன்படையை மாய்த்தான். அதுகண்ட வாருணிகள் (-வருணன்மைந்தர்) கோபங்கொண்டு இராவணன்மீது வானமாரிபோலப் பாணமாரி பொழிந்தார்கள். அவன், அந்தப் பாணங்களைத் தன் பாணங்கள்கொண்டு விலக்கும் முயற்சியில் மிக்க சிரமமடைந்தான். அதுகண்ட மகோதரன் கோபாவேசனாய் வருணன்சேனையை மாய்த்தலைக்கண்டு வாருணிகள் அவன்நெஞ்சில் நெருப்புப்போலும் பாணங்களை எய்து இராக்கதசேனையை அழித்து இராவணன் தோள்களிலும் மார்பிலும் இரத்தம் சொரக்கும்படி அம்பெய்து அண்டங்குலுங்க ஆர்ப்பரித்தார்கள். இராவணன் ஆலகாலவிடம் போலக் கொதித்துக் கோபித்தெழுந்து சூலம் வேல் தண்டு உலக்கை முதலிய படைகளை யெறிந்து அதட்டிக்கொண்டு காலன் போலத் தாக்கவே, வாருணிகள் தோற்றோடி ஊருக்குள்ளே ஒளித்தார்கள். "கண்ணெதிரேவாராது எங்கேயிருக்கிறான் வருணன்"

என்று இராவணன் கூவியபோது, வருணனுடைய மந்திரிகள் வந்து "அவன் பிரமலோகத்துக்குப் போயிருக்கிறான். அவன்குமாரர் போர்பொரமுடியாமல் வலியழிந்திட்டார்கள். இங்கே உன்னை எதிர்ப்பாரில்லை. நீ இனிதாக இட்டமான இடத்துக்கு ஏகலாம்" என்று கூறினார்கள். அதுகேட்ட இராவணன், ஆரவாரித்து வந்த வழியே திரும்பி இலங்கைக்குச் செல்வானான். வழியிலே அந்தணர் அசுரர் கந்தருவர்களுடைய கன்னியரைக் கண்டான். அவர்கள் பூனையிடத்தகப்பட்ட கிளிகள்போலவும் புலியிடத்தகப்பட்ட மான்கள்போலவும் மனங்கலங்கி வருந்த, அவர்களைப் புட்பகமீதேற்றிக்கொண்டு இலங்கையை அடைந்தான்.

இராவணன் கவர்ந்த கன்னியரின் தாய்மார் சபித்தல்

அந்தக் கன்னியரின் தாய்மார் கன்றிழந்த பசுப்போலக் கதறி "எங்கள் பெண்களை நடுங்கச்செய்த இராவணனுடைய இலங்கை நகர் நாசமடைக. அவன் முடித்தலைகள் அற்று மண்ணில் விழுவனவாகுக" என்று சாபமிட்டார்கள்.

கணவனையிழந்த சூர்ப்பநகை துயரம்

போர்க்களத்திலே தன் தமயன் இராவணனால் தன் கணவன் கொல்லப்பட்டானென்றுகேட்ட சூர்ப்பநகை, தரையில்விழுந்து புரண்டு அலறி யெழுந்து தலைமேலே கைவைத்துச்சென்று, போர்க்களத்தையடைந்து, மலைமேலே மலைவீழ்ந்தாற்போலக் கணவனுடல்மேல் விழுந்தாள். விழுந்தவள் நெடுநேரம் மூச்சற்றுக்கிடந்தாள். அதனால் அவள் கணவனோடு அநுமரணம் (-உடன் இறத்தல்) அடைந்தாளென்று அவளுடைய தோழிகள் வருந்தித் தண்ணீரை முகத்தில் தெளித்து எழுப்ப, இறந்தார் எழுந்தாற்போல எழுந்து பின்வருமாறு புலம்பினாள்*

---

*விழுந்தாளை நெடும்பொழுது வெய்துயிர்ப்பொன் றில்லாளைக்
கழிந்தாள்தன் கணவனொடும் என்றிரங்கிக் காரிகைமார்
செழுந்தாரை நீர்முகத்துத் தெளித்தெழுப்பச் செத்தவர்கள்
எழுந்தாற்போல் எழுந்தவள்தான் இவைசொல்லிப் புலம்பினாள்.

வெய்துயிர்த்தல் - வெப்பமாக மூச்சு விடுதல். ஒன்று(ம்) - சிறிது(ம்) உம்மை தொக்கது. கழிந்தாள் - செத்தாள். காரிகை - பெண்.

"நீ என்னைக் கைப்பிடித்தநாள்முதலாக, என்சொற்படி செய்யத் தவறியறியாயே! பிராணநாதா, (உன்நிலைகண்டு நடுங்குகின்றேன். இவ்வாறு) நீ என்னை நடுங்கும்படிசெய்வதை நீக்கி என்னோடு ஊருக்குப்போவதற்கு எழுந்திருப்பாயாக. (நான் வருந்தும்படி கருதிப்) பொய்யுறக்கம் உறங்காதே*

"யான் இறந்தபிறகு சூர்ப்பநகை உயிரோடிருப்பாளோ, இறப்பாளோவென்று (தெரியக்) கருதி (என்னை இறந்துபோனவனாகக்காட்டினால், அவள் உயிர்விடவில்லையானால், நான் செத்தபின்பும் இருப்பாளென்றும், அவள் சாவதாயிருந்தால் நான் செத்தபின் செத்துவிடுவாளென்றும் உண்மை தெரிந்துகொள்ளலாம். அவள் சாவதாயிருந்தால் நான் எழுந்து சாகாமல் தடுத்துவிடலாம்" என்று கருதினவனாய்) என்னைச் சோதித்தற்கு உயிரை அடக்கிக்கொண்டு கிடக்கின்றாயோ?† உனக்குப்பின் உயிரோடிருக்கும்பழிபூண்டு பெருந்துன்பமடைந்துகொண்டிருக்கமாட்டேன். எழுந்திடுவாயாக முன்னால் என்னை உனக்கு மணஞ்செய்துகொடுத்துச் சுமங்கலியாக்கிப் பின்னால் உன்னைக் கொன்று அமங்கலியாக்கிய இராவணனென்ற என் அண்ணன் அரசாளுதலை (நீ யிறந்ததை மறந்து) நோக்கிக்கொண்டு என் உடலைச் சுமந்து ஒருகணமும் வாழேன், வாழவேமாட்டேன். ‡கைகளை முறுக்கியவண்ணமாகவும் வாயை மடித்தவண்ணமாகவும் கிடக்கின்றாய். என்ன கருத்தோடு இவ்வண்ணம் கிடக்கின்றாயோ தெரிகிலேன். உன்கருத்து இராவணனுடலை முறிக்கும் பேறுபெற்றிலேனே யென்பதோ? வேறு

---

*நாதனே என்னை நீ நடுக்கங்கா ணுதூரிற்
போதநீ எழுந்திராய் பொய்யுறக்கம் உறங்காதே

காணுது - செய்யாமல். பொய் உறக்கம் உறங்காதே எழுந்திராய் எனவும் பொருத்திப் பொருள்கொள்ளலாம்.

†என்னிற்பின் சூர்ப்பநகை இருக்குமோ இலளோ என்
றுன்னிச் சோதிப்பான்உன் உயிர் அடக்கிக் கிடந்தாயோ

என்னிற்பின் - எனக்குப்பின். வேற்றுமைமயக்கம்.

‡கைம்முறுக்கி வாய்மடித்து நீகிடந்த கருத்தறியேன்
மைம்முகத்துக் கருமனத்து வாள்அரக்கர் கோமானை

யாதோ? கூறுவாயாக" என்று கணவனைக் கட்டிக்கொண்டு கதறினாள். அவளைத் தோழிமார் தூக்கித் தாங்கிக்கொண்டு வீட்டுக்குப் போனார்கள். அவள்கணவனுடல், விதிப்படி தகனஞ்செய்யப் பட்டது.

இராவணனிடம் சூர்ப்பநகை முறையிடுதல்

சூர்ப்பநகை, தோழியரெல்லாம் தேற்றத் தேறுளாய், "(எங்களைக் கல்யாணம்செய்வித்து எங்கள் வாழ்வை, ஆக்கிய தானே அழித்தல் அழகன்றென்றுணாராகுய் என்கணவனைக் கொன்ற என் அண்ணன்முன்பு, என் துன்பவாழ்வுதொலைய, என் உயிரை நாக்கைப் பிடுங்கிக்கொண்டுபோக்குவேன்" என்று கூறிப் புறப்பட்டாள். புறப்பட்டவள், சேனையோடு சென்று திக்கு விசயஞ்செய்து முப்புவனங்களையும் வெற்றிகொண்டுதிரும்பி இலங்கைக்குவந்து அரசிருக்கைமண்டபத்திலே கொலுவிருக்கும் இராவணன்முன்னேசென்று "அண்ணாவோ! அண்ணாவோ!! ஊரரெல்லாம் பழிதூற்றும்படியாகவும் உற்றாருறவினர் கதறியழுது கலங்கும்படியாகவும் என்வீட்டிலே கல்லெடுக்கும்படி வில்லெடுத்தாயே! இது உன் வீரத்துக்கு அழிவன்றோ? வளர்க்கும் முலைப்பாலே மாய்க்கும் நஞ்சானாற்போலப் போற்றுதற்குரிய மைத்துனனுடைய உயிரைப்போக்கிப் பொல்லாத கொலைகாரப் புலையனான் இராவணனென்று எல்லாரும் சொல்லக்கேட்டுத் துக்கத்தோடு வெட்கமடையலானேன். மைத்துனனுக்குச்செய்யும் மரியாதை அடுகளத்திற் படுகொலைபுரிதலோ! மைத்துனர் மிகை (-அதிக்கிரமம்) ஆன செயலைச் செய்தால் அதை விளையாட்டாகக்கொண்டு பகையாமை பண்பென்ற பழமொழியைக் கேட்டதில்லையோ? என்றுகூறி முறையிட்டு விரித்த கூந்தலும் அறுத்த கழுத்தும் வெறுத்த மனமும் உடையாளாய்த் தரையில் விழுந்து தமையன்

மெய்ம்முறிக்கப் பெற்றிலே னெனநினைந்தோ மேவாரை
மொய்ம்முறிக்கும் ஆற்றலாய் காரணம்என்? மொழிவாயே

மை - கருநிறம். கருமை - கொடுமை (தமிழகராதி.) வாள் - கொடுமை (தமிழகராதி.) மெய் - உடல். மேவார் - பகைவர். மொய்ம்முறிக்க - வலிமையைக் கெடுக்க. ஆற்றல் - வல்லமை.

கால்களைப் பிடித்துக்கொண்டு "என்னசெய்வேன்! என்னசெய்வேன்!! என்னசெய்வேன்!!! என்று ஏங்கி இரங்கிப் புலம்பி அழுது கிடந்தாள். அவன் அவளைத் தாங்கியெடுத்து "உனக்கு இந்தத் துன்பம் வந்ததற்குக் காரணம் யாது?" எனக் கேட்க, அவள் "காலகேயரோடு நீ பொருத போர்க்களத்திலே, உன்வாளால் என் நாயகனுயிரை உண்டாய்" என்று கூறினாள். அவன், "உன்புருடனை என்மனமறியாமற் போர்க்களத்திலே கொன்றிட்டேன். என்னை மதிமயங்கச்செய்து என்னைக்கொண்டே என்மைத்துனனைக் கொல்லச்செய்த விதியின்வலியைக் கடக்கவல்லாருள்ளாரோ!" என்று கூறி அவளைச் சமாதானப்படுத்தினான்.

இராவணன் ஆணைப்படி சூர்ப்பநகை கரதூடணதியரிடம் சென்றிருத்தல்

பின்பு, மைத்துனற்குரிய உத்தரக்கிரியைகளை மிக ஆடம்பரமாகச்செய்து தங்கையை மகிழச்செய்து அவளைநோக்கி "நம்முடைய தாயுடன்பிறந்த சிறியதாய்மக்களான கரன் தூடணன் திரிசிரா என்பவர்கள் தண்டகவனத்திலிருக்கிறார்கள். நான் அவர்களிடம் முன்னமேசொல்லித் திட்டஞ்செய்திருக்கிறபடி நீ அவர்களோடு தண்டகவனத்திலிருந்து வாழ்வாயாக" என்று கூறினான். அவள் அங்கேபோய் அவர்களோடு வாழ்வாளானாள்.

இந்திரசித்து பெற்ற வரங்களைச் சுக்கிரன் சொல்ல இராவணன் அறிதல்

இராவணன் நிகும்பலைவனத்துள்ளேசென்று அங்கே யாகஞ் செய்துகொண்டிருந்த தன் மகனைக் கண்டு "நீசெய்கிற காரியம் யாது?" என்றுகேட்கச் சுக்கிரன், "அங்கிட்டோம முதலிய ஏழுவகை யாகஞ்செய்துமுடித்த உன்மகனுக்குச் சிவன் வெளிப்பட்டுக் காட்சியளித்து, அழிவில்லாத தேரும் வில்லும் அம்புகளும் அம்பறுத்தூணியும் தப்பாது பகைவரை அரியும் வாளும் அளித்து, ' "மாதர்மாயத்துக்குள் அகப்படாத மகாயோகியர்களும் மயங்கும் மாயையைச்செய்து பகைவரைவெல்லும் வல்லமை உனக்கு உண்டாம்" என்று வரமருளினான்' என்று சொன்னான். சுக்கிரன் சொன்னதைக் கேட்ட இராவணன், மனமகிழ்ந்து, மகனைநோக்கி

"இனித் தேவர்க்கு அவிர்ப்பாகம் அளிக்கும் கருமமொன்றுஞ் செய்யாதே" என்றுகூறி, அவனுடன் இலங்கைக்குத் திரும்பி வந்துசேர்ந்தான்,

"மதுவென்னும் அசுரனால் நம் சிறியதாய் கவரப்பட்டிருக்கிறாள்" என்று விபீடணன் இராவணனுக்கு அறிவித்தல்

தான் கவர்ந்துகொண்டு சிறையில் வைத்திருந்த மாதரை இராவணன் கற்பழிக்கமுயன்றபோது, விபீடணன் குறுக்கிட்டுக் "குடிப்பிறப்பும் கீர்த்தியும் அழிந்தொழியக் காமவெறிகொண்டு மாதர்கற்பை மாற்றுவோர் வமிசநாசமும் நரகவாசமும் அடைவார்கள்" என்று தடுத்து "(நீ பிறமாதர்திறத்தில் செய்யக்கருதிய தீங்கு நம் சிறியதாய்க்கு நேர்ந்திருப்பதைக் கேள்.) நீ இலங்கையை விட்டு வெளியேபோயிருந்தகாலத்திலே இந்திரசித்து நிகும்பலையில் வேள்விசெய்வானாகவும் கும்பகருணன் நித்திரையில் மூழ்கியவனாகவும் நான் (தண்ணீருள் முழுகிச் செபிப்பதான அகமருட்டண மந்திரசெபம்செய்து) நீருள் முழுகியவனாகவும் இருந்த சமயத்தில், மதுவென்னும் அசுரன்வந்து இலங்காபுரியின் காட்டரண் அகழரண் மதிலரண்களைக் கடந்து காவற்சேனையைக் கட்டழித்து நம் சிறியதாய் கும்பீநசியைப் பலவந்தமாகப் பற்றிக்கொண்டுபோய் விட்டான்" என்று கூறினன்.

இராவணன் மதுவோடு பொருதற்குப் போதல்

அதுகேட்ட இராவணன், கொடுங்கோபங்கொண்டு "இது பூனைகாதை எலிமோந்துபார்த்ததுபோலிருக்கின்றது. என்னுடைய தாய்க்கு இளையவளைக் கவர்ந்து என்குலத்துமானத்தைக் குலைத்தான் மதுவென்பதைக்கேட்டும் உயிரோடிருக்கின்றேன்! மதுவின் பதியைநோக்கிப் படைகள் புறப்படுக. விபீடணன் நகரைக் காவல் செய்க. மேகநாதன் (-இந்திரசித்து) போர்க்குப் புறப்படுக. நித்திரைதெளிவித்துக் கும்பகருணனைக் கொண்டுவருக" என்று கட்டளையிட்டான். பம்பை பேரி துடி முரசு முதலிய பல வாத்தியங்களை ஒருசேர முழக்கித் துயிலுணர்த்தியபோது, கும்பகருணன் எழுந்து தான் இராவணனால் அழைக்கப்பட்டதன் காரணம் தன் சிறியதாய் கவரப்பட்டதென்றுதெரிந்து வருந்திப் போர்க்கோலம்பூண்டு தேரேறிப் புறப்பட்டான், சிவனிடம்பெற்ற வில்

முதலிய ஆயுதங்கள் தாங்கி இந்திரசித்தும் இரதாரூடனாகச் சென்றான். இராவணன் கால்களில் வீரகண்டைகளும் மார்பிற் கவசமும் அரையில் வாளும் நெற்றியில் வீரபட்டமும் அணிந்து தேரேறினான். சேனை சென்றபோது எழுந்த புழுதி கண்களில் விழ, கண்களை இமைகளால் மூடமுடியாமையால், (இமையாத கண்களுடைய) இமையார் (-தேவர்கள்) பிரமன் நமக்கு இமைக்கமுடியாத கண்களைப் படைத்து நம்மை இம்சைக்காளாக்கியிருக்கின்றானென்று வருந்தினார்கள்.*

இராவணன்சிறியதாய் அவனைச் சமாதானப்படுத்தல்.

முன்னே மேகநாதனும் பின்னே கும்பகருணனும் செல்ல, இராவணன் சென்று மதுபுரத்தை அடைந்தான். மதுவின் மனைவியான அவன் சிறியதாய் கும்பிநசி, மனங்கலங்கிக் கண்ணீர் வடிய வந்து அவன்காலில் விழுந்தாள். அவன் அவளைத் தாங்கியெடுத்து "வினைவசத்தால் விதியால் விளைந்ததற்கு வருந்தாதே" யென்று ஆறுதல் கூற, அவள் திரும்பவும் அவன்காலில் விழுந்து விம்மியழுது "மக்களையிழக்கும் துன்பத்திலும் மனைவியையிழக்கும் துன்பத்திலும் மிக்கதுன்பம் விதவை துன்பம்† அப்படிப்பட்ட துன்பத்தை யான் அடையாதபடி நீ யெனக்குத் தாலிப்பிச்சை தந்தருள்வாயாக. வேதம் விதித்த பிரமம் முதலிய எட்டுமணங்களுள்ளே (பெண்ணும் பெண்ணின் இனத்தாரும் உடன்படாவிடில் வலிதிற்கொள்வது) இராக்கதமணம் என்பதை நீ அறியாதவனன்றே. அந்த நம் குலத்துக்குரிய மணமுறைப்படி என்கணவன் கட்டுக்காவல்களைக்குலைத்து என்னை வலிதிற் கவர்ந்து மணஞ்செய்திருக்கிறான்" என்று கூறினாள். இராவணன், "உனக்காக உன்கணவன் பிழைகளையெல்லாம் பொறுத்தேன். விண்ணுலகைவெல்வதற்கு நல்லுதவிசெய்யும்படி உன்கணவனுக்கு உரைப்பாயாக" என்றான்.

---

* இமையா தொழிய எமையிழைத்தோன்
இடும்பை செய்தான் எமக்கென்றார்

இழைத்தோன் - செய்தோன் - சிருட்டித்தோன். இடும்பை - துன்பம்.

† மக்கள் இழந்த இடும்பையினும் மனையாள் இழந்த இடும்பையினும்
மிக்க இடும்பை ஒவ்வாத விதவையிடும்பை யெனவிளம்ப

இடும்பை - துன்பம்.

இராவணன் மதுவின் விருந்தினனாதல்

அவள் விடைபெற்றுச்சென்று தூங்குங்கணவனை யெழுப்பி "இராவணன் உன் உறவுவேண்டி நகர்ப்புறத்தேயிருக்கின்றான். நீ அவனையடைந்து அவன் தேவலோகசயத்தைச் செயிப்பதற்கு ஆவனசெய்து உதவுவதாகச் சொல்லுவாயாக" என, அவன் அவள் சொன்னபடிசெய்து இராவணனைப் பாராட்டித் தன் அரண்மனைக்கு அழைத்துவந்து உபசரித்து விருந்தளித்தான். இராவணன், ஒரு நாள் மதுவினமாளிகையில் இனிதிருந்து மறுநாள் சேனைசூழப் புறப்பட்டுச்சென்று குபேரனுடைய அளகாபுரிக்கருகே வந்து தங்கினான்.

இராவணன் அளகாபுரிச்சோலையடைதல்

அளகாபுரிக்கருகே, சந்தனம் முதலிய பலவகைமரங்கள் நெருங்கி எப்போது பகல், எப்போது இரவென்று பிரித்தறியாதபடி நிழலடர்ந்து இருண்டசோலையை அடைந்தான்.* சேவலன்னங்கள் பேடை (பெண்) அன்னங்களோடு இன்புற்றுவாழும் தாமரைமலர்கள் மலிந்து தெளிவும் ஆழமுமுடைய நீர்நிறைந்த தடாகங்களை யுடையது அந்தச்சோலை; (தடாகங்களிலே பூம்பள்ளியில் இன்புற்ற அன்ன இரட்டைகள்போல, அத்தடாகங்களின் கரைகளிலே மரங்கள் சொரிந்த, பூம்பள்ளிகளிலே) தேவதம்பதிகள் கூடி யின்புற்றுத் தென்றற்காற்று உலாவ மயில்கள் ஆட வண்டுகள் பாடக் கண்டு களித்து இனிதமர்ந்திருக்கும் பளிங்குத்தலங்களும் உடையது அந்தச்சோலை.

சூரியாஸ்தமனம்

இராவணன் அந்தச்சோலையின் அழகைக் கண்டனுபவித்துக் கொண்டிருந்தபோது, இவன்முன் நின்றால் தீங்குநேருமென்று ஒளித்தான்போல, மேற்றிசைக்கடலினுள்ளே குதித்தான் (அஸ்தமித்தான்) சூரியன்.

[தொடரும்]

---

* இரவும் பகலும் தெரியாத இருள்சூழ் பொழிலை எய்தினான்.

பொழில் - சோலை. எய்தினான் - அடைந்தான்.

மணிமேகலையின் காலமும் அதை இயற்றியவரும்

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஒருகாலத்து இருபுலவர் ஒருங்கியற்றி முறையே ஒருவர்முன்னிலையில் மற்றொருவரால், அரங்கேற்றப்பெற்றன என்பதும், சிலப்பதிகாரம் புகழும் சாத்தரே மணிமேகலைநூல் செய்தனரென்பதும் பண்டிதவுலகு கொண்டுள கொள்கை. அதற் காதாரம் இருபெருஞ்செய்யுட்பதிகமும் ஒரு முகமாகத் தருமுறையென்பர்.

> "சிலப்பதிகாரமென்னும் பெயரால்
> ... ...
> உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்
> உரைசா லடிகள் அருள, மதுரைக்
> கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்"

எனச் சிலப்பதிகாரப்பதிகமும்,

> "இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ப
> வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்
> மாவண் டமிழ்த்திற மணிமேகலை துறவு
> ஆறைம் பாட்டினுள் அறிய வைத்தனன்"

என மணிமேகலைப்பதிகமும், தம்முள் மாறி எதிரொலியதிரக்கேட்பார் அவற்றை மெய்யெனக்கொண்டு மயங்கலும் கூடும்.

இப்பதிகங்கள் யாரால் எப்பொழுது இயற்றப்பெற்றன? இவற்றின் இயைபும் உண்மையும் எவ்வளவு ஏற்றற்குரியன? என்று ஆராயாமலே ஒருவர் சொல்லியதை வழிமொழிவது* அறிவறமாகுமா?

---

* பட்டினப்பாலை கரிகாலனைப் பாடியதென்றும், ஆதிமந்தி கரிகாலன் மகளென்றும், ஒட்டாதுரைத்தவர்கட்டுரை இன்னும் வழங்குதலும் இதன்பாற்படும்.

பதிகமென்பதே பண்டைநூலறியாப் பின்னோர் புகுத்திய புதுவழக்கு. பழம்பெருநூல்களை முயன்றுபயின்று கைவரக்கற்கப் பொறுமையும் அறிவும் குறுகிய பிற்காலத்திற் பெருநூல்களுக்குச் சுருக்கம் அமைக்கும் வழக்கம் எழுந்தது. சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, கம்பர்காவியம் போன்ற விரிந்த தொடர் நிலைச்செய்யுட்கெல்லாம் சுருக்கங்கள் தொகுக்கலானார். வடமொழியில் இத்தகைய சுருக்கங்கள் 'பிரதீகம்' எனப்படும். பிரதீகம் என்றால், சங்கிரகம் அதாவது சுருக்கம் எனப் பொருள்படும். பிரதீகத்தின் மரூஉ பதிகமாதல் வெளிப்படை. ஒருபதுபாட்டைப் "பதிக"மென்பது வடகலைவழக்கின் வடுவுடைத்தமிழ்ச்சொல். நூற்பொருட்சுருக்கம் நுவலும் "பதிகம்" தமிழில் தளிர்க்கும் முளிந்த வடமொழி. ஆன்றோர்நூலும் சான்றோர்செய்யுளும் ஆளாத பதிகத்தை, இளங்கோவடிகள் தம் முத்தமிழ்ப்பனுவல் முன் வைத்திலரென்பது, அவர்பாவொடுபொருந்தாப் பதிகமுரண்களைப் படித்தறிவார்க்கு வெள்ளிடைமலைபோல் விளங்குவதாகும்.

முதலில், (கதை)வரலாற்றைக் காட்சிக்காதையில் அடிகள் விளக்கும் முறையொடு முழுதும் முரண்படப் பதிகம் உரைப்பதை யாரும் மறத்தற்கில்லை. குடக்கோச்சேரன் செங்குட்டுவன், தான், மலைகாண்குவமென......வஞ்சிமுற்றம் நீங்கிச்செல்வோன்,........

'பெருமலை விலங்கிய பேரியாற் றடைகரை
இடுமண லெக்க ரியைந்தொருங் கிருப்ப',

அவனைக் காணக் கையுறையாகப் பலபொருள்களையும் மலைமிசை மாக்கள் தலைமிசைக்கொண்டு(வந்து வணங்கித் தந்து பணிந்து)

'எழ்பிறப் படியேம் வாழ்கநின் கொற்றம்
... ...
பன்னூ றாயிரத் தாண்டு வாழியர்'

என வாழ்த்திக்

'கான வேங்கைக் கீழோர் காரிகை
தான்முலை யிழந்து தனித்துய ரெய்தி
.....................வானகம் பெற்றனள்;
எந்நாட்டாள்கொல்? யார்மகள்கொல்லோ?
நின்னாட் டியாங்கள் நினைப்பினும் அறியோம்'

(என்ன),

'மண்களி நெடுவேன் மன்னவற் கண்டு
கண்களி மயக்கத்துக் காதலோ டிருந்த
தண்டமி ழாசான் சாத்தன்'

மதுரையில் நிகழ்ந்ததை மன்னற்குரைத்து 'ஊழியூழி' 'வழிவழி சிறக்கநின் வலம்படுகொற்றம்' என்று வாழ்த்தினன். அத் தீத் திறம் கேட்ட மன்னர்கோமான்,

'மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக வில்லெனத்
துன்னிய துன்பந் துணிந்துவந் துரைத்த
நன்னூற் புலவர்க்கு நன்கன முரைத்'தான்

என்பது அடிகள்கூற்று. எனவே மலைக்குறவர் திறையொடுவந்து மன்னனை வணங்கித் தம் கட்புலங்காணக் கண்ணகி விட்புலமெய்திய செய்தியைச் சேரன்செங்குட்டுவற்குத் தெரிவித்தனர். அவ்வழிப் பரிசிற்கு அரசன்பால் வந்திருந்த தண்டமிழ்ச்சாத்தனார் தாம் முன் மதுரையில் அறிந்தசெய்தியைக் குட்டுவற்கு உரைத்தார். [வேந்தனோடிருந்த இளங்கோவடிகள் அதனைக் கேட்டுக் கண்ணகிகதையைப் பண்ணொடுபயிலும் செந்தமிழ்ச்செய்யுளிற் சிலம்பின்பெயராற் செய்துமுடித்தனர்:] என்பது அடிகளின் வடித்தசொற்றுணிவாம்.

இனி இதைப்பற்றிப் பதிகம் சொல்வதை நோக்குவோம்.

'....இளங்கோவடிகட்குக் குன்றக்குறவர் ஒருங்குடன்கூடி....ஒருமுலையிழந்தாளோர் திருமாபத்தினி.......எங் கட்புலம் காண விட்புலம் போயது இறும்பூதுபோலும்; அஃதறிந்தருள் நீ' என, அவனுழை (இளங்கோவுடன்) இருந்த தண்டமிழ்ச்சாத்தன் "யானறிகுவன் அது பட்ட"தென்றுரைப்போன்..."மதுரைமூதூர்.....(வெள்ளியம்பலத்து நள்ளிருட் கிடந்தேன்.... வீரபத்தினிமுன் மதுரைமாதெய்வம் வந்துதோன்றி...முதிர்வினை முடிவைக் கூறக்) கோட்டமில் கட்டுரை கேட்டனன் யான்" என,....(சிலப்பதிகாரச்) செய்யுள், 'உரைசாலடிகள் அருள, மதுரைக் கூலவாணிகன் சாத்தன் கேட்டனன், இது பால்வகை தெரிந்த பதிகத்தின் மரபு'

என்பது பதிகவரலாறு.

இதில், குன்றக்குறவர், இறைவனை யிகழ்ந்தாங் கிளங்கோவடிகட்கு எய்தியதுரைத்தாரென்றும், அப்பொழுது அவரொடிருந்த சாத்தன் மதுரைநிகழ்ச்சியை அடிகட்கு உரைத்தனன் என்றும்,

சாத்தன்வேண்ட அடிகள் அக்கதையைச் செய்யுளாக்கிச் சாத்தன் கேட்க உரைத்தனர் என்றும் கூறக் காண்குவம்.

செய்யுளில் தாமே விளக்கும் செய்தியொடு முற்றும் முரண்படப் பதிகம் பாடும் குற்றம் அடிகள்பாற்கூறுதல் கூடுமா? அன்றி, மரபிறந்து மன்னனை மறந்து தமக்குத் தாமே தலைமைதரும் தவறு அரசுதுறந்த அடிகளின்சால்பொடு பொருந்துமா? இம்முரண் ஒன்றே பதிகம் அடிகள் பாடியதன்றெனற்குப் போதியசான்றாகும்.

இனி இதனினும் பெரியதோர் இழுக்குமுளது; அதனையும் ஆய்ந்து நோக்குவம். மணிமேகலையின் பதிகவரலாற்றால், சாத்தனார் செய்யுளைப் பாடி அடிகள்முன் படித்துக்காட்ட, அவர் அதை முழுதும் கேட்டனரென்று தெரிகிறது. அச்செய்யுளில். ஆபுத்திரனொடு மணிபல்லவம்சென்ற மணிமேகலை அங்கிருந்து தந்தை கோவலன் தாய் கண்ணகி—எனும் 'இருவர்தம் கடவுளெழுதிய படிமங் காணிய வேட்கைதுரப்ப' (அந்தரத்தாறு வடக்குவழி கூடிச்) செங்குட்டுவன் அவர்க்கெடுத்த கோட்டம்புகுந்து வணங்கிப் பிறகு வஞ்சியுட்படர்ந்து சமயக்கணக்கர்பலர்திறங்கேட்டுப் பின் தன் பாட்டன் மாசாத்துவானைத் தொழுது அவனால் தனது தாயரான மாதவி சுதமதி இருவரும் அறவணவடிகளும் புகாரைக் கடல்கொளக் காஞ்சிசென்றிருப்பதறிந்து, அந்நகர்சென்று அம்மூவரையும் அங்கே கண்டனளென்றும், அறவணவடிகளாலும் புகார் கடல்வாய்ப்பட்டழிந்ததைக் கேட்டாளென்றும், பிறகு அவரால் புத்தபிடக அருளறங்கேட்டுத் துறவுபூண்டனள் என்றும் விளங்குகிறது.

ஆகவே மணிமேகலையின் துறவுக்குமுன்னமே, பட்டினம் கடல்வாய்ப்பட்டதும், கண்ணகி வஞ்சியிற் கற்படிமத்தே கடவுளாய் நின்றதும் கழிந்தசெய்திகள் என்பர் வாணிகச்சாத்தனார்.

அதைக் கேட்டறிந்த இளங்கோவடிகள், குட்டுவன் கண்ணகி கோயிலெடுத்து, அவள் கடவுட்படிமக்கல் அதில் நட்டு, அப்பத்தினிக்கோட்டத்துக் கைவினைமுற்றிய (அவள்) தெய்வப்படிமத்து வித்தகர் இயற்றிய விளங்கியகோலத்து முற்றிழை நன்கலம்பூட்டிப் பூப்பலிசெய்து........கடவுண்மங்கலம் (பிரதிஷ்டை) செய்து வாழ்த்தும்போதே,

"மாசாத்து வான்துறவும் கேட்டாயோ அன்னை!
மாநாய்கன் தன்துறவும் கேட்டாயோ அன்னை!"

"மாதவி தன்துறவும் கேட்டாயோ தோழி!
மணிமேகலை துறவும் கேட்டாயோ தோழி!"

என்று புகாரிலிருந்துபோந்த தேவந்திமுதலியோர் அரற்றியதாய்ப் பாடியுள்ளார்.

அன்றியும், புகாரில் இந்திரவிழா அறைந்து, அவரவர்மரபிற் சிறப்புச்செய்கென முரசுமுழங்க, அதற்கு முறைப்படி அரங்கக் கூத்தியரான

"மணிமேகலையொடு மாதவிவாராத்
தணியாத் துன்பம் தலைத்தலை மேல்வரச்
சித்திராபதிதான் செல்லலுற் றிரங்கி
..............தன்மகள் (மாதவி) தோழி
வயந்த மாலையை வருகெனக் கூஉய்"

கோவலன்சாவ நாடகப்பரத்தையர் நற்றவம்புரிவது நாணுடைத் தென்றலரார் அவட்கு நீ சென்றுரையென்ன, மாதவிக்கு அதனைத் தோழிபோய்ச் சொல்ல, மாதவி 'மாபெரும்பத்தினிமகள் மணிமேகலை' யாதலின், அவள் இனித் 'திருந்தாச்செய்கைத் தீத்தொழிற்படாஅள்'; 'அறவணவடிகள்பால் ஐவகைச் சீலத்தமைதிகேட்டு உயிர் உய் வகைகொள்ள யான் உறுதிகொண்டுளேன்; சித்திராபதிக்கு இதைச்செப்பு நீ' என மாதவியுரைத்ததாய் மணிமேகலைப்பா கூறு கின்றது. இதற்கு மாறாக,

"மையீ ரோதி வகைபெறு வனப்பின்
ஐவகை வகுக்கும் பருவங் கொண்டது
... ...
தலைக்கோ லாசான் பின்னுளனாகக்
(குலமரபுகொள்ளவையாதிருப்பதைக்)
குலத்தலை மாக்கள் கொள்கையிற் கொள்ளார்
யாது நின்கருத்து? என்செய்கோ? என
மாதவி நற்றாய் மாதவிக் குரைப்ப"

அவ்வளவில் மாதவி,

"வருகஎன் மடமகள் மணிமேகலை யென்று
... ...
கோதைத் தாமம் குழலொடு களைந்து
போதித் தானம் புரிந்தறம் படுத்தனள்"

என்று செங்குட்டுவற்குத் தேவந்திகையே 'மணிமேகலைதன் வான்றுறவுரைக்கும்' என்பது வரந்தருகாதையில் இளங்கோவடிகள் வடித்துக்கூறிய வரலாறாகும்.

எனவே, காதலனுற்ற கடுந்துயர்க்கிரங்கிக் கைம்மைநோற்கும் கணிகை மாதவிசெய்கையை வெறுக்கும் சித்திராபதி, மணிமேகலையையும் அணியரங்கேற்றாது அவளெழில்கழியக் குலநல மொழிய வாளாவளர்க்கும் மாதவிபால் அவள்தோழியை அனுப்பி ஊர்த்தெருவிழவில் தன் மகள்மகளைத் தன் குலவிருத்திக்கு விடுமாறு திருத்தமுயன்றாளென்பர் சாத்தனார்.

மூங்கைப்பருவமெய்திவிளங்கும் மணிமேகலை தங்குலக் கொள்கை தழுவாமையால் வாளாகழியும் அவள் எழிலிளவளத்துக்கிரங்கும் மாதவிநற்றாய், தானே தன்மகள் மாதவிக்கு இனத்தவர்பழியைத் தன் மனத்துறும் வெறுப்பொடு சொன்னதாய் அடிகள் கூறுவர்.

பெருவிழாச்சிறப்பில் மாதவியும் மணிமேகலையும் வாராமைக்கு வருந்திய கிழவி, திருந்தி அவர் திருவுறச்செய்யத் தூண்டினளென்பர் சாத்தர்.

இந்திரவிழவூரெடுப்பதைப் பாடும் இளங்கோவடிகள் பேரூர் விழவில், காதலனிழவு மாதவிதனக்கு வந்ததுரைத்து மணிமேகலையின் துறவோடு அதற்குத் தொடர்புகூறிலர்.

தாயின் வாய்மொழி தோழிசொல்லக் கேட்ட மாதவி, மணிமேகலை 'மாபெரும் பத்தினிமக'ளாதலினால் "அருந்தவப்படுத்தலல்லது திருந்தாச்செய்கைத் தீத்தொழிற்படாஅள்" எனச் சித்திராபதிக்குச் செய்தியனுப்பியதாகமட்டும் சாத்தனார் உரைப்பர். பிறகு மணிமேகலை, தன் ஊரை (காவிரிப்பூம்பட்டினத்தை)க் கடல்கொண்டு உறவினர் அழியப் பலஇடம் அலைந்து பின் காஞ்சியில் அறவணவடிகளின் அருளால் துறவுபெற்றனளென்று அவர் விளங்கவைத்தனர்.

அடிகளோ, நற்றாய் தன்பால் உற்றுக் கழறி ஊாலருரைத்த தும், உடனே மாதவி விடைபகராமல், மணிமேகலையை வருகென அழைத்துக் "கோதைத்தாமம் குழலொடுகளைந்து போதித்தானம் புரிந்தறம்படுத்தத் துறவு அவள் பெற்றதாய்ச் சொல்விமுடித்தார்.

ஆகவே, கண்ணகிபடிமக் கடவுண்மங்கலவாழ்த்துக்கு முன்னமே, தந்தையும் தாயும் தாம் நனியுழந்த வெந்துயரிடும்பை கேட்டுளம்வெதும்பி மணிமேகலையும் மாதவியோடு துறந்தசெய்தி யைச் சிலப்பதிகாரம் கூறக் கேட்போம்.

எனவே, மணிமேகலைதுறவுக்குமுன்னரே பட்டினம் கடல் வாய்ப்பட்டு அழிந்தொழிந்ததென்று ஈரிடத்து இருமுறைமணிமே கலையில் மதுரை வாணிகச்சாத்தர் சொல்லுவர்.

சிலப்பதிகார முதலிலும் முடிவிலும் பொன்றுதலறியாப் புகார்ப்பட்டினம் குன்றாவளத்தொடு கோநகராக ஊழியூழியாய்ச் சோழரொடு சிறக்குமென வாழியாடுவர் ஈரிடத்திளங்கோ.

இவ்விருசெய்யுளும் செவ்விதின் இயற்றிய இருபெரும்புலவ ரும் அவற்றை ஒருவர்முன் ஒருவர் ஒருங்கு அரங்கேற்றிக் கேட்டனராயின், ஒருமகள் துறவை ஓராங்குரையாது இருவகை யாய் அதை முரணவுரைப்பது இயற்கையாகுமா? அன்றே.

இன்னும் கண்ணகிசெய்தியைக் குறவரும் புலவரும் கூறக் கேட்ட குட்டுவன், வடபால் படையொடுசென்று ஆரியவரசரைச் சீர்குலைத்து இமயக்கல்லினையெடுத்துக் கங்கைநீர்ப்படுத்து வஞ்சிக்கு வந்து கண்ணகிபடிமக்கல்லினைநிறுத்திக் கடவுண்மங்கலஞ்செய்யு முன்னமே, காவிரிப்பூம்பட்டினம் கடலால் அழிந்ததாய்த் தம் பெருஞ்செய்யுளிற் பன்முறை சாத்தனார் பகருகின்றனர். அது கேட்டறிந்தும், அடிகள் தம்பாட்டில்,

"பொதியி லாயினும் இமய மாயினும்
பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பிற் புகாரே யாயினும்
நடுக்கின்றி நிலைஇய என்ப தல்லதை
ஒடுக்கம் கூறார் உயர்ந்தோர் உண்மையின்
முடித்த கேள்வி முழுதுணர்ந் தோரே"

என்று மங்கலவாழ்த்தில் வற்புறுத்துவர்.

அழிந்தொழிந்த ஒரூரை மலைபோல் நிலையியதென்று தூய துறவியாய் வாய்மைபிறழாத அடிகள், அவ்வூரழிவு சாத்தனார் வாயாற் கேட்டபின், தாம் தம் நெஞ்சறிந்தபொய்சொலநினைப்பரா? அழிந்த பாழூரை வாழ்த்திச் செய்யுள்பாடத்தொடங்குதல் மங்கலமாகுமா? அதுமட்டோ! கடவுளர்காயக் காவிரிப்பட்டினம் கடல்கொளப்பட்டபின் அதனைப் 'பதியெழுவறியாப் பழங்குடிகெழீஇய பொதுவறுசிறப்பிற் புகார்' என்றும், ஊர் ஆழியில் ஆழ்ந்தபின் அங்கே 'உயர்ந்தோர் உளர்' என்றும் உரைப்பது வாய்மையா?

புகார்நகர் என்றும் 'நடுக்கின்றி நிலைஇய' என்று வாழ்த்தொடு தொடங்கும் சிலப்பதிகாரம், 'சோழன் புகார்நகரம் பாடேலோரம்மானை' என அம்மானைவரியும்

'தீங்கரும்பு நல்லுலக்கை யாகச் செழுமுத்தம்
பூங்காஞ்சி நீழ லவைப்பார் புகார்மகளிர்'

என்று வள்ளையும் பாடி வாழ்த்தொடு முடியக் கேட்டுமகிழ்கிறோம்.

ஆகையால், காவிரிப்பட்டினம் கடல்கோளால் அழியாமுன்னே இளங்கோவடிகள் சிலப்பதிகாரமியற்றினர்; பின்னர் அந்நகர் முந்நீர்விழுங்கி முடிந்தகாலத்தில் மணிமேகலைகதையை ஒரு சாத்தனார் பாடினர்—என்று இச்சான்றுகளாலே தோன்றுகிறது.

மேலும், இளங்கோவடிகள் கபிலபரணர்காலத் திருந்தவர். அவர்தம் சிலப்பதிகாரம் தொல்காப்பியனார் நூற்படி பாடப்பெற்ற தாய் யாவரும் கூறுவர். "பதிகம்", "நூன்முகம்", "பாயிரம்" என்பவை பண்டைநூலறியாப் புதிய கொள்கைகள். தொல்காப்பியனார், செய்யுட்கெல்லாம் பொதுவாய் வாழ்த்தியல் நான்கு வகுத்துளர். அந்நால்வகையுள் பொருளொடுபொருந்தும்வாழ்த்தியலொன்றொடு செய்யுளைத் தொடங்குதல் ஆன்ற புலமைப் பழமரபாகக் காண்குவம். கடவுள்கண்ணிய புறநிலைவாழ்த்து, மாந்தர்க்கெல்லாம் வழிநனி பயக்கும் வாயுறைவாழ்த்து, அவையடக்கியலொடு, செவியறிவுறூஉ என வாழ்த்தியல் நால்வகை. அந்நால்வாழ்த்தும் அழகுற அமைந்த வள்ளுவர்குறள் யாவருமுவக்க உலகினில் இலகும். சிலப்பதிகாரம்

குறள்போல அறநூலாகாது புலமையின்பக்காப்பியமாதலால், செவி யுறைதவிர மற்றைய வாழ்த்தியல் மூன்றும் சோமங்கலவாழ்த் தொடு தொடங்கக் காண்போம். உலகெலாம் வழுத்தும் அலகிலா வொளிதரும் இருசுடர்போற்றும் புறநிலைவாழ்த்தும், குறளைப்போல வே எல்லாமாந்தர்க்கும் வழிநனிபயக்கும் மாமழைபோற்றிய வாயுறைவாழ்த்தும், ஒடுக்கமறியா நடுக்கின்றிநிலைஇய உயர்ந் தோர்ப்போற்றும் அவையடக்கியலும், முறைபெற வாழ்த்தியல் மூன்றும் முதலில் நிறைவுறத்தொடங்கும் சிலப்பதிகாரம். அதன் முன்னிற்கும் பதிகம் பழநூல்மரபொடும் செய்யுள்வரலாற்றோடும் முரணக்காணலால், அடிகள் அதனை ஆக்குதல் கூடாது. அதனா லும், சிலப்பதிகாரம் புகார் அழியாமுன் வஞ்சியில் இளங்கோ இயற்றியதென்பதும், அதன்பின் சிலபல ஆண்டு சென்றபின் மதுரைக் கூலவாணிகன்சாத்தன் மணிமேகலைகதை எழுதினன் என்பதும் விளக்கமாகும்.

மேகலைதுறவு பட்டினம் அழிந்து கெட்டபின் எழுந்த செய்யு ளாதலின், பின்னோர்புகுத்திய புதுமரபு தழுவி, மணிமேகலைக்குப் பதிகம் அமைந்ததை வியத்தல்வேண்டா. எனினும், அதனைப் பாடிய சாத்தன், செங்குட்டுவனோடு தங்கியிருந்த தண்டமிழ்ப் பாவலர் சீத்தலைச்சாத்தர் அல்லரெனச் சுட்டும் சான்றுகள்தம்மை யும் ஆய்ந்து தெளிதல் அறிவறமாகும்.

சிலப்பதிகாரச்செய்யுள் அவரைத் "தண்டமிழாசான் சாத் தன்" என்னும். அஃதலால் அவர்தம் ஊரொடு தோற்றமொன்றையும் இளங்கோ உரைத்திலர். மணிமேகலை நூற்பதிகம் அதனைச் செய்த வர்பெயரைக் "கூலவாணிகன் சாத்தன்" என்று கூறுகிறது. ஒரு பெயருடையார் பலர் உளராயின் அவ்வவர்பெயரோடு ஓர் அடை புணர்த்து வேறுபாடுணர்த்தல் நன்மரபாகும். தொல்காப்பியர், காப்பியாற்றுக் காப்பியனார், சேந்தன்தந்தை காப்பியனார் எனக் காப்பியர்பலரை ஏற்பதோர் அடையால் விளங்கச்சுட்டும் வழக்கம் அறிவோம். இன்னும், நக்கீரனார், கீரங்கீரனார், குட்டுவன்கீரனார், சேந்தன்கீரன், மோசிகீரனார் என்று பலர் கீரரை வேறுபாடறிய வெவ்வேறு அடையொடு விளித்துளார் முன்னோர். அதுவே போலப் பழந்தொகைப்பாக்களையாக்கிய புலவருள் சாத்தன் என்று

வத்தப்படுபவர் பலர் உளர். ஊரையும் தொழிலையும் உறுப்பையும் குறிப்பதாய் வெவ்வேறு அடைகொடுத்து அவ்வப்புலவரை ஐயுரு தறியச்செய்வது வழக்கு. பெருஞ்சாத்தன், பேரிசாத்தன், பெருந்தலைச்சாத்தன், மோசிசாத்தனார், சீத்தலைச்சாத்தனார், செய்தி வள்ளுவன் பெருஞ்சாத்தன், செல்லூர் இளம்பொன் வாணிகன் சாத்தன், மதுரைக் கூலவாணிகன் சாத்தன் எனப் பலர் சாத்தர் புலவருலகில் நிலவக்காண்போம். இவருள், ஊரால் வேறுபாடுணர்த்தப்பெறுபவர், சீத்தலை, செல்லூர் மதுரைத்தொடர்பால் முறையே வழங்கப்படும் மூவருமாவர். கழாத்தலை, குளித்தலை, செந்தலை, பிடார்த்தலை என்பனபோலச் சீத்தலையென்பது ஓர் ஊரின் பெயரே. திருச்சிவளாகம் பெருமானூர்க்கூற்றத்து இன்றும் அப்பழவூர் நின்றுநிலவ நாம் நேரிற்காணலாம். ஊரடை புணர்ப்பது வேறுபாடுணர்த்தற்காதலின், ஒருபெயர்க்கு ஈரூர்தொடுப்பது மிகையாகும். மதுரைச்சாத்தனும் சீத்தலைச்சாத்தனும் ஒருவனே யாயின் ஓரூரடையேபோதியதாகும். ஓரூரிருவர் ஒருபெயர்கொள்ளின் ஊரடைபோதா; உறுப்போ தொழிலோ சிறப்பதை அடையாய்ச் சேர்ப்பது முறையாம்.

சீத்தலைச்சிறப்படைச் சாத்தனார் பண்டு பாணர்காலப்புலவர் என்பது தொகைநூற்பாக்களைத் துருவுவோர் அறிவர். அவர் பாடிய தலைவரும், பல பழஞ்செய்தியும், சிலப்பதிகாரக்குறிப்பும் அவர்தொன்மைசுட்டும் சான்றுகளாகும்.

மணிமேகலைக்கதை பாடிய புலவன் மதுரைக் கூலவாணிகன் சாத்தன். அவன் காவிரிப்பட்டினம் கடலாற்கெட்டு அழிந்தபின் இருந்த பாவலன். புத்தரின் தூய தத்துவம் மறந்து பேதைமை புகுந்து ஊக்கமும் ஊனும் போக்கிய சாக்கியர் பிறமதம் பழித்துப் புன்கதைபுனைந்து தம்மதம் புகழும் பிந்தியகாலப் பௌத்தக் கொள்கையன்.

சீத்தலைச்சாத்தர் வைதிகவழக்கொடு மாறுபடாத பொது நோக்குடைய விரிந்த பொதுவறவுள்ளமுடையவர். இன்னும் சீத்தலைச்சாத்தர், தொல்பெரும்புலவர் எல்லோரையும்போற் புரவலர்ப்பாடி வாழ்க்கைபேணும் இரவற்பாவலர். அதனால் பாண்டியன் மாண்டதும் சேரனைத் தேடிச்சென்று அவனோடும் தங்கியிருந்தவர்.

மணிமேகலையெனும் கணிகையின் துறவுபாடிய சாத்தன் மதுரையிற் கூலவாணிகனாதலின், இரந்துயிர்வாழ்தலை யிகழும் நிலையினன்.

இவர் இருவரையும் ஒருவரென்பது தெருமரலுளத்தார் தேராக்கூற்றாம்.

பீடுயர்கூடலிற் பிற பெரும்புலவர் கூடுதல்போலவே சாத்தப் பெயருடைத் தமிழ்ப்பாவலர் பலர் வாழநேர்ந்ததால், பிறர் பலர் அப் பெயருடையருள் வேறிவற் பிரித்துச் சுட்ட ஊர்போதாமல் தொழிலையும் கூட்டிக் "கூலவாணிகன் சாத்தன்" என்று இவனை ஆலவாய்ப்புலவர் அழைத்தனர்போலும்.

தொல்லோர் பாக்களைத்தொகுத்த பிற்காலத்தவர், இப்புலவனும் சீத்தலைச்சாத்தரும் ஒருவரென மயங்கி, இருவர் பெயரொடும் ஈரூர்த்தொடர்பையும் மருளவழங்கத்தொடங்கியதால் பின், தெருளாப்புலவர் தேறாது இணையடை சேர்ப்பாராயினர். "மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார்" என்று ஒருபெயர்க்கடையாய் ஈரூரிணைத்தும் போதாமல் தொழிலையும் சேர்த்துச் சுட்டவேண்டுவதேன்?. அன்றியும் ஒருமை பன்மைகள் விரவுதல் எதற்கு? வாணிகர் சாத்தனார் என்பதால் எழும் ஏதம் என்ன? தொகைநூற் புலவர்வரிசையில் வேறு யாரும் இவ்வாறு ஈரூரிணையடைபெறாமையாலும், சாத்தற்கும் ஓராங்கு நிரந்தரமாகப் பாட்டுக்கள் தோறும் சீத்தலையோடு மதுரையும் சேர்ந்துவாராமையாலும் வந்த சிலஇடம் எழுதுவோர்பிழையெனத் தெளிதல் எளிது. தொழிலோடு ஊரும் சொல்லாதுவிடுத்துத் 'தண்டமிழாசான் சாத்தன்' என்றே இளங்கோவடிகள் இயம்பக் காண்போம். மதுரை வணிகன் மற்றைய சாத்தன் இல்லாப்போது தொழிலடைகூட்டிச் சொல்லாதமைந்ததிற் பொல்லாங்கு இல்லை. பதிகம் இரண்டும் சீத்தலைச்சார்பைச் சாத்தற்கு ஏற்றிக்கூறவும் இல்லை. "மதுரைக் கூலவாணிகன் சாத்தன்" என்றே சிலப்பதிகாரச் செய்யுட்பதிகமும், "கூலவாணிகன் சாத்தன்" என்றே மணிமேகலைப்பதிகமும் சுட்டியமையும்.

அகத்தில் 53, 134, 320 பாக்களின்கீழும், நற்றிணை, 36,127, 336 மூன்றுபாட்டோடும், குறுந்தொகை 154-ஆம் பாட்டோடும் கூடலும் கூலவாணிகக் குறிப்பும் விடப்பட்டுச் சீத்தலையொன்றே சிறப்படையாகச் சுட்டக்காண்குவம். அதன்மேல், சீத்தலைச்சாத்தருக்கு யாண்டும் பலர்பாலீறும், வாணிகன்சாத்தற்கு ஆண்பாலீறுமே புணர்த்து வேறுபாடுணர்த்துங் குறிப்பு நாம் மறத்தற்கில்லை. பண்டைப்புலவர் கொண்ட மதிப்பு இவ்விருவரிடத்தும் வேறுபடுவதை இவ்வீறுகள் காட்டும்.

இன்னும் இவ்விருசாத்தரும் வெவ்வேறு புலவரென்று விளக்கும் குறிப்புகள் வேறும் உளவாம். சீத்தலைச்சாத்தர், செங்குட்டுவனொடு கிள்ளிவளவன் நெடுஞ்செழியன் எனும் வண்புகழ் மூவர் தண்டமிழ்வரைப்பை ஆண்டநாள் வழ்ந்து மாண்ட புலவர். அவர் காலப்பாண்டியன் வடவாரியர்படைகடந்த நெடுஞ்செழியன். அவனுக்குப்பிறகு மதுரையை ஆண்ட பாண்டியருள், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் ஒருவன். அவனுக்கும் பிறகு சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனைப்பாடியவன் மணிமேகலை துறவுபாடிய வாணிகன் சாத்தன். சீத்தலைச்சாத்தர், கரிகாலன் தந்தை இளஞ்சேட்சென்னியையும், செங்குட்டுவனையும் அவனுக்கு முன் வஞ்சியிலாண்ட நெடுஞ்சேரலாதனையும் பாடிய பலரோடு ஒருகாலப்புலவராவர்.

எனவே, பதினெட்டு நூற்றாண்டுகளுக்குமுன் செங்குட்டுவனொடுதங்கும் தகவினரென்று சிலப்பதிகாரம் புகழும் பழம்புலவர் சீத்தலைச்சாத்தர், பொதுவறு சிறப்பிற் புகார்மகளிர் தம் சோழனின் பாழித்தடவரைத்தோள் பாடிப் பாராட்டிய பழங்காலப்புலவராவர்; மணிமேகலைகதை அணிபெறப்புனைந்த மதுரைக் கூலவாணிகன் சாத்தனே, காவிரிப்பட்டினம் கடலில் ஆழ்ந்தபின் சாக்கிய மதத்தரை ஊக்கமுயன்ற வேறோர் பிற்காலப் புலவனாதல் ஒருதலை.

S. S. Bharati,